# ARUL IAS ACADEMY

## TNPSC நடப்பு நிகழ்வுகள் - தமிழ்

## மார்ச் - 2021









| S.NO | INDEX | PAGE NO |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு செய்திகள் | 2 |
| 2. | சிறப்பு செய்திகள் | 8 |
| 3. | முக்கிய நிகழ்வுகள் | 17 |
| 4. | செய்திகளில் நபர் | 25 |
| 5. | பொருளாதார நிகழ்வுகள் | 32 |
| 6. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 37 |
| 7. | தேசிய செய்திகள் | 40 |
| 8. | சர்வதேச செய்திகள் | 51 |
| 9. | பிற மாநில செய்திகள் | 61 |
| 10. | விளையாட்டு செய்திகள் | 70 |
| 11. | முக்கிய தினங்கள் | 77 |

| 1. தமிழ்நாடு செய்திகள் | மார்ச் 2021 இல் தமிழகத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் |
|---|---|

**தூத்துக்குடி வஉசி துறைமுகம் ரூ. 27 ஆயிரம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- தூத்துக்குடி வஉசி துறைமுகம் 45 நிறுவனங்களுடன் ரூ. 27 ஆயிரம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இதுகுறித்து துறைமுக பொறுப்புக் கழகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: இந்திய கடல்சார் துறையில் உள்ள உலகளாவிய முதலீட்டு வாய்ப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் முதன்மை முயற்சியாக இந்திய கடல்சார் மாநாடு (மார்ச் 2, 3, 4) ஆகிய 3 நாள்கள் இணையதள வழியில் நடைபெறவுள்ளது.

**இந்தியாவில் அமைதியாக வாழத் தகுதியான நகரங்களில் சென்னை, கோவை இடம்பிடிப்பு!**

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப்சிங் பூரி, 'நகராட்சிகளின் செயல்திறன் குறியீடு - 2020' மற்றும் அமைதியாக வாழ்வதற்கு தகுதியான நகரங்கள் பட்டியலை வெளியிட்டார்.
- இந்த 2 பிரிவுகளிலும் 10 லட்சம் மக்கள்தொகைக்கு அதிகமான நகரங்கள், குறைவான நகரங்கள் என தனித்தனியாக பிரித்து அவற்றில் சிறந்த தலா 10 நகரங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளன.
- இந்த பட்டியல், மொத்தம் 111 நகரங்களை ஆய்வு செய்து தயாரிக்கப்பட்டு உள்ளது.
- அமைச்சகம் 'நகராட்சி செயல்திறன் குறியீட்டை' வெளியிட்டது, இதன் கீழ் புது தில்லி நகராட்சி கவுன்சில் மில்லியனுக்கும் குறைவான மக்கள்தொகை பிரிவில் முதலிடத்திலும், மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை பிரிவில் இந்தூர் முதலிடத்திலும் உள்ளது.

**முதல் 10 தரவரிசை:**

| வாழ்க்கை குறியீட்டின் எளிமை | | | | |
|---|---|---|---|---|
| தரவரிசை | மக்கள் தொகை மில்லியன் + | | மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை | |
| | நகரம் | ஸ்கோர் | நகரம் | ஸ்கோர் |
| 1 | பெங்களூரு | 66.70 | சிம்லா | 60.90 |
| 2 | புனே | 66.27 | புவனேஷ்வர் | 59.85 |
| 3 | அகமதாபாத் | 64.87 | சில்வாசா | 58.43 |
| 4 | சென்னை | 62.61 | காக்கினாடா | 56.84 |
| 5 | சூரத் | 61.73 | சேலம் | 56.40 |
| 6 | நவி மும்பை | 61.60 | வேலூர் | 56.38 |
| 7 | கோவை | 59.72 | காந்திநகர் | 56.25 |
| 8 | வதோதரா | 59.24 | குருகிராம் | 56.00 |
| 9 | இந்தூர் | 58.58 | தாவங்கரே | 55.25 |
| 10 | கிரேட்டர் மும்பை | 58.23 | திருச்சிராப்பள்ளி | 55.24 |

| நகராட்சி செயல்திறன் அட்டவணை | | | | |
|---|---|---|---|---|
| தரவரிசை | மக்கள் தொகை மில்லியன் + | | மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை | |
| | நகராட்சி | ஸ்கோர் | நகராட்சி | ஸ்கோர் |
| 1 | இந்தூர் | 66.68 | புது தில்லி எம்.சி. | 52.92 |
| 2 | சூரத் | 60.82 | திருப்பதி | 51.69 |
| 3 | போபால் | 59.04 | காந்திநகர் | 51.59 |
| 4 | பிம்ப்ரி சின்ச்வாட் | 59.00 | கர்னல் | 51.39 |
| 5 | புனே | 58.79 | சேலம் | 49.04 |
| 6 | அகமதாபாத் | 57.60 | திருப்பூர் | 48.92 |
| 7 | ராய்ப்பூர் | 54.98 | பிலாஸ்பூர் | 47.99 |
| 8 | கிரேட்டர் மும்பை | 54.36 | உதய்பூர் | 47.77 |
| 9 | விசாகப்பட்டினம் | 52.77 | ஜான்சி | 47.04 |
| 10 | வதோதரா | 52.68 | திருநெல்வேலி | 47.02 |

## தஞ்சாவூர் அருகே - ராஜராஜசோழனின் கல்வெட்டு கண்டெடுப்பு

- தஞ்சாவூர் அருகே ராஜராஜ சோழன் காலத்து நிலக்கொடை குறித்த கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இக்கல்வெட்டில் ராஜராஜசோழ னின் நிலக்கொடை பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. மேலும், வான வன் மூவேந்த வேளாண் என்ற அதிகாரியின் பெயர் காணப்படு கிறது. இவர், ராஜராஜசோழன் காலத்தில் உயர் பொறுப்பில் இருந்த அதிகாரி. ராஜராஜ சோழனின் 2-வது ஆட்சியாண்டு தொடங்கி 9-வது ஆட்சியாண்டு வரை உள்ள திருப்புறம்பியம் கல்வெட்டிலும், 17-வது ஆட்சி யாண்டு கரந்தை கல்வெட்டிலும் மூவேந்த வேளாண் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறந்த குழந்தைநல மருத்துவமனை

- காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனையானது நாட்டின் சிறந்த குழந்தைநல மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவமனை என்று போற்றப் பட்டுள்ளது.
- இந்த கணக்கெடுப்பு 'News Week' எனும் இதழினால் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த கணக்கெடுப்பு 'Statista Inc.' என்ற இணைய தளத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.
- இந்த கணக்கெடுப்பு ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய ராஜ்ஜியம், ஜெர்மனி, கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்பட 25 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது.



**தஞ்சையில் உள்ள தொழிநுட்ப நிறுவனம் உட்பட நிறுவனங்களை தேசியமயமாக்க அமைச்சரவை ஒப்புதல்!!**

- தமிழகத்தின் தஞ்சை மாநகரத்தில் உள்ள இந்திய பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஹரியானா மாநிலத்தில் உள்ள ஒரு தேசிய உணவு தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை பயிற்சி நிறுவனத்தை தேசியமயமாக்க மசோதா நிறைவேற்றப்பட்டது. இதனை அடுத்து தற்போது மத்திய அரசு அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த இரு நிறுவனங்களும் தேசியமயமாக்கப்படுவதன் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடஒதுக்கீடு நடைமுறை அனைத்தும் பின்பற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2019 ஆம் ஆண்டே இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. இனி இந்த இரு நிறுவனங்களும் ஐஐடி போன்று செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொந்தகை அகழாய்வில் 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய மூடியுடன் கூடிய முதுமக்கள் தாழி கண்டெடுப்பு**

- சிவகங்கை மாவட்டம், கொந்தகையில் தொடங்கியுள்ள 7 ஆம் கட்ட அகழாய்வில், 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய மூடியுடன் கூடிய முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது.
- கீழடியில் கடந்த பிப்ரவரி மாதம் 7 ஆம் கட்ட அகழாய்வு தொடக்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 6 ஆம் கட்ட அகழாய்வு நடந்த கொந்தகையிலும் அகழாய்வுப் பணிகள் தற்போது தொடங்கி நடைபெற்று வருகிறது.
- கொந்தகையில் 6 ஆம் கட்ட அகழாய்வின்போது, 25-க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இதன்மூலம், கொந்தகை பண்டைய காலத்தில் ஈமக் காடாக இருந்தது தெரியவந்தது.
- இந்நிலையில், இங்கு நடைபெற்று வரும் 7 ஆம் கட்ட அகழாய்வில் தோண்டப்பட்ட ஒரு குழியின் மேல்புறத்திலேயே முதுமக்கள் தாழி இருந்தது தெரியவந்தது.
- இந்த முதுமக்கள் தாழி சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்கள் பயன்படுத்தியது என, தொல்லியல் துறையினர் தெரிவித்தனர். தற்போது, 7 ஆம் கட்ட அகழாய்வில் முதலாவதாகக் கிடைத்துள்ள மூடியுடன் கூடிய இந்த முதுமக்கள் தாழியை ஆவணப்படுத்தும் பணி நடந்து வருகிறது.

**தமிழகத்தில் 1940 கி.மீ. தொலைவு சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம்: நிதின் கட்கரி**

- மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கூறுகையில், 'தமிழகத்தில் 235 மாநில நெடுஞ்சாலைகள் 11,175 கிலோ மீட்டர் தொலைவுக்கு உள்ளது. 50 தேசிய நெடுஞ்சாலைகள் 6,858 கிலோ மீட்டர் தொலைவுக்கு உள்ளது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் 1940 கிலோ மீட்டர் சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி மேம்பாட்டிற்கு மத்திய அரசு நடப்பு நிதியாண்டு வரை கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.8,395 கோடி வரை செலவிட்டுள்ளது 'என்றார்.

**தமிழ்நாடு – தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் அதிக வருவாய்ப் பற்றாக்குறை உள்ள மாநிலம்**

- ஒரு அறிக்கையின்படி, வாக்கெடுப்பிற்கு உட்பட்ட மாநிலங்களில், ரூ.65,994 கோடி மதிப்பில் அதிக வருவாய்ப் பற்றாக்குறை உள்ள மாநிலமாக தமிழகம் உள்ளது.
- இது 2020-21 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி கூறப்படுகிறது.

- பொருளாதார அளவின் அடிப்படையில், தமிழ்நாட்டின் பொருளாதாரமானது இந்தியாவில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாகும்.
- அதனையடுத்து மேற்கு வங்காளம் (6வது), கேரளா (11வது) அசாம் (17வது) மற்றும் புதுச்சேரி (26வது) ஆகியவை உள்ளன.
- ஒட்டு மொத்தமாக இவை இந்தியப் பொருளாதாரத்தின் 20% பங்காகும்.
- இவ்வறிக்கையின்படி 2020 ஆம் நிதி ஆண்டு வரையிலான காலகட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் அசாம் மாநிலம் 8.6% என்ற அளவில் அதிகபட்ச சராசரி பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது.
- மேற்கு வங்காளம் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றின் பொருளாதார வளர்ச்சியானது தேசத்தின் சராசரி வளர்ச்சி வீதத்திற்கு இணையாக உள்ளது.
- 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் காரணமாக கேரள மாநிலத்தின் வளர்ச்சி 6.3% என்ற வீதத்தில் சராசரி தேசிய வளர்ச்சி வீதத்தை விட குறைவாகவே உள்ளது.

**States' report card**

Among the poll bound States/UTs, Assam had the highest average economic growth rate (8.6%) in FY16-20, followed by Tamil Nadu (8%)

| State | Average economic growth rate in % (FY16-20) | Inflation for Feb. 2021 (%) | Unemployment rate for Feb. 2021 (%) |
|---|---|---|---|
| Assam | 8.6 | 6.5 | 3.4 |
| Tamil Nadu | 8 | 7.2 | 4.8 |
| Puducherry | 6.7 | 8 | 5.8 |
| West Bengal | 6.7 | 5.3 | 6.2 |
| Kerala | 6.3 | 4.9 | 4.3 |
| All India | 6.7 | 5 | 6.9 |

Source: CARE Ratings report data sourced from Budget documents, RBI, CMIE, PRS Legislative

## சாகித்ய அகாடமி விருது 2020

ARUL IAS ACADEMY

- சாகித்ய அகாடமி "2020 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது" வென்ற நபர்களின் பெயர்களை அறிவித்துள்ளது.
- இந்த விருது இலக்கியப் பின்னணியில் மிகச் சிறந்த புத்தகங்களுக்கு வழங்கப்படுகிறது.
- 24 முதன்மை இந்திய மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியில் வெளியிடப்பட்ட இலக்கியப் படைப்புகளுக்கு இது வழங்கப்படுகிறது.
- ஆங்கிலம், இந்தி மற்றும் அரசியலமைப்பின் எட்டாவது பட்டியலில் இருக்கும் 22 மொழிகளும் இதில் அடங்கும்.
- ஆங்கிலத்தில் "When God is a Traveller" என்ற கவிதைத் தொகுப்பிற்காக சுப்பிரமணியம் அவர்கள் இந்த விருதை வென்றுள்ளார்.
- கன்னட மொழியில் "ஸ்ரீ பாஹுபலி அஹிம்சா திக்விஜயம்" என்ற காவியக் கவிதைக்கு வேண்டி வீரப்ப மொய்லி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- தமிழ் எழுத்தாளர் இமயம் தனது 'செல்லாத பணம்' என்ற புதினத்திற்காக 2020 ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதை வென்றுள்ளார்.
- அவர் தன்னை திராவிட இயக்கத்தின் எழுத்தாளர் என்று அழைத்துக் கொள்கிறார்.
- இந்த விருதை வென்ற தமிழ்நாட்டின் 'நடு நாடு' எனப்படும் கடலூர், விழுப்புரம் மற்றும் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் இருந்து வந்த முதல் எழுத்தாளர் இவராவார்.

**சாகித்ய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்கள்**

| ஆண்டு | படைப்பு (தன்மை) | படைப்பின் எழுத்தாளர் |
|---|---|---|
| 1955 | தமிழ் இன்பம் (கட்டுரைத் தொகுப்பு) | ரா. பி. சேதுப்பிள்ளை |
| 1956 | அலை ஓசை (நாவல்) | கல்கி கிருஷ்ணமூர்த்தி |
| 1957 | (விருது வழங்கப்படவில்லை) | |
| 1958 | சக்கரவர்த்தித் திருமகன் (இராமாயணத்தின் உரைநடை) | சி. ராஜகோபாலச்சாரி |
| 1959 | (விருது வழங்கப்படவில்லை) | |
| 1960 | (விருது வழங்கப்படவில்லை) | |
| 1961 | அகல் விளக்கு (நாவல்) | மு.வரதராசனார் |
| 1962 | அக்கரைச்சீமை (பயண நூல்) | சோமு (மீ. ப. சோமசுந்தரம்) |
| 1963 | வேங்கையின் மைந்தன் | அகிலன் (பி. வி. அகிலாண்டம்) |
| 1964 | (விருது வழங்கப்படவில்லை) | |
| 1965 | ஸ்ரீ ராமானுஜர் (வாழ்க்கை வரலாறு) | பி. ஸ்ரீ ஆச்சார்யா |
| 1966 | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (வாழ்க்கை வரலாறு) | ம. பொ. சிவஞானம் |
| 1967 | வீரர் உலகம் (இலக்கிய விமர்சனம்) | கி. வா. ஜகன்னாதன் |
| 1968 | வெள்ளைப் பறவை (கவிதை) | அ. சீனிவாச ராகவன் |
| 1969 | பிசிராந்தையார் (நாடகம்) | பாரதிதாசன் |
| 1970 | அன்பளிப்பு (சிறுகதைகள்) | கு. அழகிரிசாமி |
| 1971 | சமுதாய வீதி (நாவல்) | நா. பார்த்தசாரதி |
| 1972 | சில நேரங்களில் சில மனிதர்கள் (நாவல்) | ஜெயகாந்தன் |
| 1973 | வேருக்கு நீர் (நாவல்) | ராஜம் கிருஷ்ணன் |
| 1974 | திருக்குறள் நீதி இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) | கே. டி. திருநாவுக்கரசு |
| 1975 | தற்கால தமிழ் இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) | ஆர். தண்டாயுதம் |
| 1976 | (விருது வழங்கப்படவில்லை) | |
| 1977 | குருதிப்புனல் (நாவல்) | இந்திரா பார்த்தசாரதி |
| 1978 | புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (விமர்சனம்) | வல்லிக்கண்ணன் |
| 1979 | சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) | தி. ஜானகிராமன் |
| 1980 | சேரமான் காதலி (நாவல்) | கண்ணதாசன் |
| 1981 | புதிய உரைநடை (விமர்சனம்) | மா. ராமலிங்கம் |
| 1982 | மணிக்கொடி காலம் (இலக்கிய வரலாறு) | பி. எஸ். ராமையா |
| 1983 | பாரதி : காலமும் கருத்தும் (இலக்கிய விமர்சனம்) | தொ. மு. சிதம்பர ரகுநாதன் |
| 1984 | ஒரு காவிரியைப் போல (நாவல்) | லட்சுமி திரிபுரசுந்தரி |
| 1985 | கம்பன் : புதிய பார்வை (இலக்கிய விமர்சனம்) | அ. ச. ஞானசம்பந்தன் |
| 1986 | இலக்கியத்துகாக ஒரு இயக்கம் (இலக்கிய விமர்சனம்) | க. நா. சுப்பிரமணியம் |
| 1987 | முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) | ஆதவன் |
| 1988 | வாழும் வள்ளுவம் (இலக்கிய விமர்சனம்) | வா. செ. குழந்தைசாமி |
| 1989 | சிந்தாநதி (சுயசரிதக் கட்டுரைகள்) | லா. ச. ராமாமிர்தம் |
| 1990 | வேரில் பழுத்த பலா (நாவல்) | சு. சமுத்திரம் |
| 1991 | கோபல்ல கிராமத்து மக்கள் (நாவல்) | கி. ராஜநாராயணன் |
| 1992 | குற்றாலக் குறிஞ்சி (வரலாற்று நாவல்) | கோவி. மணிசேகரன் |
| 1993 | காதுகள் (நாவல்) | எம். வி. வெங்கட்ராம் |
| 1994 | புதிய தரிசனங்கள் (நாவல்) | பொன்னீலன் (கண்டேஸ்வர பக்தவல்சலன்) |
| 1995 | வானம் வசப்படும் (நாவல்) | பிரபஞ்சன் |

| ஆண்டு | படைப்பு (தன்மை) | படைப்பின் எழுத்தாளர் |
|---|---|---|
| 1996 | அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) | அசோகமித்ரன் |
| 1997 | சாய்வு நாற்காலி (நாவல்) | தோப்பில் முகமது மீரான் |
| 1998 | விசாரணைக் கமிஷன் (நாவல்) | சா. கந்தசாமி |
| 1999 | ஆலாபனை (கவிதைகள்) | அப்துல் ரகுமான் |
| 2000 | விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள் (விமர்சனம்) | தி. க. சிவசங்கரன் |
| 2001 | சுதந்திர தாகம் (நாவல்) | சி. சு. செல்லப்பா |
| 2002 | ஒரு கிராமத்து நதி (கவிதைகள்) | சிற்பி பாலசுப்ரமணியம் |
| 2003 | கள்ளிக்காட்டு இதிகாசம் (நாவல்) | வைரமுத்து |
| 2004 | வணக்கம் வள்ளுவ (கவிதைகள்) | ஈரோடு தமிழன்பன் |
| 2005 | கல்மரம் (நாவல்) | ஜி. திலகவதி |
| 2006 | ஆகாயத்துக்கு அடுத்த வீடு (கவிதைகள்) | மு.மேத்தா |
| 2007 | இலையுதிர் காலம் (நாவல்) | நீல. பத்மநாபன் |
| 2008 | மின்சாரப்பூ (சிறுகதைகள்) | மேலாண்மை பொன்னுசாமி |
| 2009 | கையொப்பம் (கவிதைகள் (மொழிபெயர்ப்பு) | புவியரசு |
| 2010 | சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) | நாஞ்சில் நாடன் |
| 2011 | காவல் கோட்டம் (புதினம்) | சு. வெங்கடேசன் |
| 2012 | தோல் (புதினம்) | டேனியல் செல்வராஜ் |
| 2013 | கொற்கை (புதினம்) | ஜோ டி குரூஸ் |
| 2014 | அஞ்ஞாடி | பூமணி |
| 2015 | இலக்கியச் சுவடுகள் (திறனாய்வு நூல்) | ஆ. மாதவன் |
| 2016 | ஒரு சிறு இசை (சிறுகதைகள்) | வண்ணதாசன் |
| 2017 | காந்தள் நாட்கள் (கவிதைகள்) | இன்குலாப் |
| 2018 | சஞ்சாரம் (புதினம்) | எஸ். ராமகிருஷ்ணன் |
| 2019 | சூல் (புதினம்) | சோ. தர்மன் |
| 2020 | செல்லாத பணம் (நாவல்) | இமையம் |

## சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமிவிருது பெற்றார் தமிழ் எழுத்தாளர் கே.வி.ஜெயஸ்ரீ

- 2019 ஆம் ஆண்டுக்கான சிறந்த மொழிபெயர்ப்புக்கான (தமிழ்) விருது **'நிலம் பூத்து மலர்ந்த நாள்'** என்னும் நாவலுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- மலையாளத்தில் சங்க காலப் பாணர், கூத்தர்களின் ஆற்றுப்படையாக உரைநடையில் இந்நாவல் எழுதப்பட்டது. வெளியான குறுகிய காலத்திலேயே பெருத்த வரவேற்பைப் பெற்ற நாவல், பல பதிப்புகளைக் கண்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.
- இது திருமதி ஜெயஸ்ரியின் 12 வது மொழிபெயர்க்கப்பட்ட படைப்பு.

## மாணவர்கள் கல்விக் கடன் பெற்ற மாநிலங்களில் தமிழகம், கேரளம் முன்னிலை: நிர்மலா சீதாராமன்

- தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் மாணவர்கள் அதிகளவில் கல்வி கடன் பெற்று வருகின்றனர். அந்த வகையில் மாணவர்கள் அதிகமாக கல்வி கடன் பெற்ற மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.
- இந்த ஆய்வு கணக்கெடுப்பு கடந்த 2020 ஆம் டிசம்பர் மாதம் வரை உள்ள நிலவரம் ஆகும். நாடு முழுவதும் மொத்தமாக 24,84,397 பேர் 89,883 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளனர்.

| மாநிலங்கள் | மக்கள் | கோடிகளில் |
|---|---|---|
| தமிழ்நாடு | 6,97,066 பேர் | 17,193.30 |
| கேரளா | 3,25,703 பேர் | 10,236 |

- கல்வி கடன் குறைவாக பெற்ற மாநிலம் பீகார் ஆகும்.

| 2. சிறப்பு செய்திகள் | மிக முக்கியமான நிகழ்வு சிறப்புச் செய்தி என்று அழைக்கப்படுகிறது |
|---|---|

## இந்தியா நன்கொடையளித்த டிஜிட்டல் கோபால்ட் சிகிச்சை இயந்திரம்

- இந்தியாவில் பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்ட, புற்றுநோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் டெலிகோபால்ட் இயந்திரம், மத்திய சுகாதாரத் துறை சார்பில் தீவு நாடான மடகாஸ்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- மேம்பட்ட டிஜிட்டல் கோபால்ட் சிகிச்சை அளிக்கும் இந்த இயந்திரமான **'பாபட்ரான் - 2'** - ஐ மடகாஸ்கரின் தலைநகரான அன்டனனரிவோவில் உள்ள ஜோசப் ரவோஹாங்கி ஆண்ட்ரியனாவலோனா மருத்துவமனையில் (HJRA) அந்நாட்டின் குடியரசுத் தலைவர் ஆண்ட்ரி ராஜோலினா திறந்து வைத்தார்.
- கடந்த 2018 - ஆம் ஆண்டு மார்ச்சில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், மடகாஸ்கருக்கு விஜயம் செய்தபோது, பாபட்ரான் இயந்திரம் மடகாஸ்கருக்கு நன்கொடையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து இந்தியாவில் இருந்து இந்த இயந்திரம் மடகாஸ்கருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நாடாளுமன்றத்திற்கென ஒருங்கிணைந்த தொலைக்காட்சி சேனல்: மத்திய அரசு அறிவிப்பு

- நாடாளுமன்ற நிகழ்வுகள் ஒளிபரப்பாகும் லோக்சபா மற்றும் ராஜ்யசபா டிவிகளை இணைத்து சன்சாத் டிவி என்ற புதிய சேனல் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த தொலைக்காட்சி சேனலுக்கு ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ரவி கபூர் தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## புதர்த் தவளைகளின் 5 புதிய இனங்கள்

- புதர்த் தவளைகளின் 5 புதிய இனங்கள் இந்தியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் மேற்குத் தொடர்ச்சி மலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- மேற்குத் தொடர்ச்சி மலையானது உலகளவில் பல்லுயிர்ப் பெருக்க முக்கியத் தளங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தவளைகள் பண்டைய உலக மரத் தவளைக் குடும்பமான ரக்சோபோரிடே (Rhacophoridae) என்ற குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.
- இவை தில்லி பல்கலைக்கழகம், கேரள வன ஆராய்ச்சி மையம் மற்றும் மின்னசொட்டா பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இந்த ஆராய்ச்சியானது ஏறத்தாழ கடந்த 10 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்குத் தொடர்ச்சி மலையின் (ராஆர்ச்செஸ்டிஸ்) புதர்த் தவளை என்பது குறித்த மிக விரிவான ஆய்வின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் தகவல்கள் பியர்ஜெ என்பதில் வெளியிடப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய 5 இனங்கள் பின்வருமாறு
  - ராவ்ஆர்ச்செஸ்டிஸ் டுரூட்டாகு
  - ராவ்ஆர்ச்செஸ்டிஸ் காக்காயாமென்சிஸ்
  - ராவ்ஆர்ச்செஸ்டிஸ் கெய்ராசபினே
  - ராவ்ஆர்ச்செஸ்டிஸ் சஞ்சாபாய்
  - ராவ்ஆர்ச்செஸ்டிஸ் வெள்ளிக்கண்ணன்



- இந்தப் புதிய 5 இனங்களும் கேரளா மாநிலம் தெற்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படுகின்றன.

**சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு**

- ‘சர்வதேச தினை 2023’.
- ஐக்கிய நாடுகள் அமைப்பானது 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக ஒருமனதாக அறிவித்துள்ளது.
- இது வங்க தேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா மற்றும் செனகல் ஆகிய நாடுகளுடன் சேர்த்து இந்தியாவினால் முன்மொழியப்பட்டு, 70க்கும் மேற்பட்ட நாடுகளினால் ஆதரிக்கப்பட்டது.

**இந்தியாவின் எதிர்ப்பை மீறி பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே அணை கட்ட அனுமதி தந்தது சீனா**




- பிரம்மபுத்திரா அணையின் குறுக்கே பிரமாண்ட அணை கட்ட, சீனா தனது 14வது ஐந்தாண்டு திட்டத்தில் அனுமதி வழங்கி இருக்கிறது.
- திபெத்தில் யர்லாங் சாங்போ என அழைக்கப்படும் பிரம்மபுத்திரா நதி, வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலபிரதேசம், அசாம் வழியாக வங்கதேசத்துக்கு செல்கிறது.
- தன்னாட்சி அதிகாரம் கொண்ட திபெத் மாகாணத்தில், பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே பிரமாண்ட அணை அமைத்து, நீர் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை சீனா செயல்படுத்த உள்ளது.
- சீனாவின் 14வது ஐந்தாண்டு திட்டமானது 2021ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்த அணையின் மூலம், சுமார் 2000 அடி உயரத்தில் இருந்து பாயும் நதி நீரை பயன்படுத்தி 7 கோடி கிலோவாட் மின்உற்பத்தி செய்யமுடியும்.
- இதன் மூலமாக சீனாவின் ஒட்டுமொத்த மின் தேவையில் 30 சதவீதம் பூர்த்தி செய்ய முடியும்.
- திட்டத்தின் மூலம் கிடைக்கும் 30,000 கோடி கிலோவாட் மின்சாரம் மூலமாக சீனாவின் கார்பன் வெளியீட்டை குறைக்கும் இலக்கை 2030ம் ஆண்டுக்குள் அடைய முடியும். மேலும் 2060ம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை முழுமையாக நிறுத்த முடியும்.

**வாக்குப் பதிவின்போது வாக்காளர்களுக்கு கையுறை**

- கரோனா நோய்த் தொற்று பரவாமல் இருக்க, தமிழகத்தில் வாக்குப் பதிவின் போது வாக்காளர்களுக்கு கையுறை அளிக்கப்படும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

**தமிழகத்தில் தேர்தலில் வாக்காளர் எண்ணிக்கை 6 கோடி, தேர்தல் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்கள் எண்ணிக்கை 4 லட்சம். அதன் விவரம்:**

**வாக்காளர்கள்:**

- ஆண்கள் : 3,08,38,473
- பெண்கள் : 3,18,28,727
- மூன்றாம் பாலித்தனவர் : 7,246
- **மொத்தம் : 6,26,74,446**
- தேர்தல் பணி அலுவலர்கள் : 4,79,892.
- வாக்குச் சாவடிகள் : 88,937
- வாக்கு எண்ணும் மையங்கள் : 76
- கண்காணிப்பில் ஈடுபடும் பொதுப் பார்வையாளர்கள் : 150
- சட்டம் - ஒழுங்கு பார்வையாளர்கள் : 40
- செலவினப் பார்வையாளர்கள் : 118
- கன்னியாகுமரிக்கு ஒரு பார்வையாளர்.
- புகார்கள் தெரிவிக்க...1950 மற்றும் 1800 4252 1950. (இரண்டும் கட்டணமில்லாத தொலைபேசி எண்கள்)

## மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்

- இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையமானது தெலுங்கானாவில் பெட்டபள்ளி மாவட்டத்தில் உள்ள ராமகுண்டத்தில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- இது தேசிய அனல் மின் கழகத்திற்குச் சொந்தமானதாகும் (NTPC - National Thermal Power Corporation).
- ராமகுண்டத்தில் உள்ள இந்த மின் ஆலையின் திறன் 100 மெகாவாட் ஆகும்.
- இதைத் தவிர, இந்தக் கழகமானது கேரளாவில் உள்ள காயம்குளம் எரிவாயு ஆலையில் 92 மெகா வாட் மிதக்கும் அலகு மற்றும் விசாகப் பட்டினத்தில் சிம்ஹாத்திரி மின் ஆலையில் 25 மெகா வாட் மின் அலகு ஆகிய இரண்டையும் அமைத்துக் கொண்டு இருக்கின்றது.

**NTPC**

- NTPC நிறுவனம் ஆனது மின்சார உற்பத்தி மற்றும் அது தொடர்பான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியப் பொதுத் துறை நிறுவனமாகும்.
- இது நிறுவனங்கள் சட்டம், 1956 என்ற சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது இந்திய அரசினால் ஊக்குவிக்கப்படுகின்றது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மின் நிறுவனமாகும்.



## ஆப்கானிஸ்தான் மீதான ரஷ்ய சந்திப்பில் இந்தியா இல்லை

- ஆப்கானிஸ்தான் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிராந்திய மாநாட்டிற்கான அமெரிக்க திட்டங்களின் பின்னணியில், ரஷ்யா, அமெரிக்கா, சீனா மற்றும், ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் பிரதிநிதிகள், தலிபான் மற்றும் பிற மூத்த ஆப்கானிஸ்தான் தலைவர்களுடன் பாக்கிஸ்தானில் இருந்து சிறப்பு தூதர்களின் மாநாட்டை நடத்துவதாக அறிவித்துள்ளது.
- எவ்வாறாயினும், ஐ.நா. தலைமையிலான உருவாக்கம் போலல்லாமல், ரஷ்ய மாநாட்டிற்கு இந்தியா அழைக்கப்படவில்லை என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தினர், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா இடையேயான ஆலோசனைகளை உள்ளடக்கிய இரண்டு ஆண்டு பழமையான **"ட்ரொயிகா"** செயல்முறையைப் பற்றி அறிவித்துள்ளது.

## தரவு புள்ளி

DATA BYTE

**Measure of popularity**

The table shows the top 10 candidates who won by securing the highest vote shares in their constituencies. The analysis includes data from Assembly elections since 1967

| Candidate | Constituency | *Vote share |
|---|---|---|
| P. Vijayaraghavan | Killiyoor (1977) | 79.2 |
| M. Karunanidhi | Chepauk (1996) | 77.05 |
| C. Kulandaivelu | Kolathur (1991) | 76.51 |
| Gandhirajan S. | Vedasandur (1991) | 76.47 |
| Chinnasamy K. | Sendamangalam (1991) | 76.19 |
| P.N. Vallarasu | Usilampatti (1996) | 76.18 |
| Arivalagan A. | Krishnarayapuram (1991) | 76.04 |
| P.K. Mookiah Thevar | Usilampatti (1971) | 74.46 |
| Thirugnanam P.R. | Yercaud (1984) | 74.4 |
| Selvaganapathi T.M. | Tiruchengode (1991) | 74.1 |

Source: Election Commission of India *(in %)

## கானமயிலை பாதுகாக்க உச்ச நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கிறது

- குஜராத் மற்றும் ராஜஸ்தானில் குறைந்து வரும் இயற்கை வாழ்விடங்களின் ஊடாக இயங்கும் மின் இணைப்புகள் மீது மோதியதில் கானமயில்கள் இறந்து விழுந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட்டுள்ளது.

**கானமயில்:**

- கானமயில்கள் (ஆர்டியோடிஸ் நிக்ரைசெப்ஸ்) என்பது இந்திய துணைக் கண்டத்தின் பூர்வீகமாகும்.
- கானமயில் என்பது வறண்ட புல்வெளிகளிலும் புல்வெளிப் பகுதிகளிலும் காணப்படும் பெரிய நிலப்பரப்பு பறவைகள்.
- பறக்கும் பறவைகளில் இது மிகப்பெரியது.
- இது ஐ.யு.சி.என் சிவப்பு பட்டியலில் ஆபத்தான ஆபத்தானதாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## கருக்கலைப்பு உச்சவரம்பை 24 வாரங்களாக உயர்த்தும் மசோதாவுக்கு ஒப்புதல்

- 1971 - க்கு முன்னர் இந்திய கிரிமினல் சட்டப்படி கருக்கலைப்பு செய்வது குற்றமாக கருதப்பட்டு சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டு வந்தது.
- 1971 - ம் ஆண்டு மருத்துவரீதியிலான கருக்கலைப்பு சட்டத்தை இந்தியா கொண்டுவந்தது. இந்த சட்டத்தின் படி 20 வாரங்கள் வரை இருக்கும் கருவை கலைக்கலாம் என்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

| Time since conception | Requirement for terminating pregnancy | |
|---|---|---|
| | MTP Act , 1971 | MTP (Amendment) Bill, 2020 |
| Up to 12 weeks | Advice of one doctor | Advice of one doctor |
| 12 to 20 weeks | Advice of two doctors | Advice of one doctor |
| 20 to 24 weeks | Not allowed | Two doctors for some categories of pregnant women |
| More than 24 weeks | Not allowed | Medical Board in case of substantial foetal abnormality |
| Any time during the pregnancy | One doctor, if immediately necessary to save pregnant woman's life | |

- மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு செய்வதற்கான உச்சவரம்பை 24 வாரங்களாக உயர்த்தும் சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- கருத்தடை முறை அல்லது சாதனத்தின் தோல்வி காரணமாக முடித்தல்: கருத்தடை முறை அல்லது சாதனம் தோல்வியுற்றால், திருமணமான ஒரு பெண்ணால் 20 வாரங்கள் வரை கர்ப்பம் நிறுத்தப்படலாம். இந்த காரணத்திற்காக திருமணமாகாத பெண்களும் ஒரு கர்ப்பத்தை நிறுத்த மசோதா அனுமதிக்கிறது.
- **தனியுரிமை:** ஒரு பதிவுசெய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவருக்கு கர்ப்பம் நிறுத்தப்பட்ட ஒரு பெண்ணின் விவரங்களை மட்டுமே வெளிப்படுத்தலாம். மீறல் ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

## பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா - அமெரிக்கா உறுதி



- இந்தியாவும் யு.எஸ்ஸும் பல இருதரப்பு மற்றும் பலதரப்பு இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளன.
- இந்தியாவுக்கும் யு.எஸ்.க்கும் இடையில் அடிப்படை ஒப்பந்தங்கள், லெமோவா, கோம்காசா மற்றும் பெக்காவும் கையெழுத்திடப்பட்டுள்ளன.
- சமீபத்தில் இந்தியா, யு.எஸ்., ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவின் தலைவர்களின் உச்சி மாநாடு நாற்கால கட்டமைப்பின் கீழ் நடைபெற்றது.
- புளோரிடாவில் உள்ள யு.எஸ். மத்திய கட்டளை மற்றும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்திலும் ஆபிரிக்காவிலும் யு.எஸ். கட்டளைகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை தீவிரப்படுத்த இந்தியா தீர்மானித்தது.
- யு.எஸ். பாதுகாப்பு செயலாளர் இந்தியாவுடனான கூட்டு இந்தோ - பசிபிக் அமெரிக்க கொள்கையின் **“மைய தூண்”** என்று விவரித்தார்.
- பாதுகாப்பு, ராணுவ ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இந்தியாவும் அமெரிக்காவும் உறுதிபூண்டுள்ளன. தில்லியில் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்த அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின், இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் இதனை உறுதி செய்தனர்.
- மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ள லாய்ட் ஆஸ்டின், ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோரை தில்லியில் சந்தித்துப் பேசினார்.
- இந்திய - பசிபிக் பிராந்தியத்தில் சர்வதேச சட்டங்களை நிலைநாட்டும் வகையில் இந்தியாவுக்கு நவீன தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இது சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது.
- இதுதவிர அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஆளில்லாத விமானங்கள், 114 போர் விமானங்களை வாங்குவது தொடர்பாகவும் இந்தச் சந்திப்புகளின்போது விவாதிக்கப்பட்டது.
- அதே நேரத்தில், ரஷியாவிடம் இருந்து எஸ் - 400 வான் பாதுகாப்புக் கருவிகளை வாங்கும் இந்தியாவின் முடிவைக் கைவிட அமைச்சர் ஆஸ்டின் கேட்டுக் கொண்டிருக்கவும் வாய்ப்புள்ளது.

## அரிய நோய்களுக்கான மருத்துவக் கொள்கை: மார்ச் 31 - க்குள் அறிவிக்க மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு



- அரிய நோய்களுக்கான தேசிய சுகாதாரக் கொள்கையை மார்ச் 31 - ஆம் தேதிக்குள் இறுதி செய்து அறிவிக்குமாறு மத்திய அரசுக்கு தில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இதுபோன்ற நோய்களுக்கு ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் சிகிச்சை முறைகளுக்கான தேசியக் கூட்டமைப்பை (NCRDT) அமைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- மேலும், 2020 - ஆம் ஆண்டின் அரிய நோய்களுக்கான தேசிய சுகாதாரக் கொள்கையை மார்ச் 31 அல்லது அதற்கு முன்னதாக மத்திய அரசு இறுதி செய்து அறிவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## முதியவர்களுக்கான போஷான் அபியான் திட்டம்




- முதியவர்களுக்கு "ஊட்டச்சத்து ஆதாரத்தினை" வழங்குவதற்கான "போஷான் அபியான்" திட்டத்தினை சமூக நல மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகம் தொடங்க உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், முதியோர் இல்லங்களில் தங்கியிருக்காத, ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட ஆதரவில்லாத முதியவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.
- சூடான சமைத்த மதிய உணவினை வழங்க உள்நாட்டிலேயே கிடைக்கும் சத்தான உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வதில் இத்திட்டம் கவனம் செலுத்தும்.
- இத்திட்டமானது கிராம பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி அமைப்புகளால் அமல்படுத்தப்படும்.
- "மூத்த குடிமக்கள் நல நிதி" என்ற நிதியானது இத்திட்டத்திற்கு நிதி வழங்கவும் அமல்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

## கருச்சிதைவு இழப்பீட்டு விடுமுறைச் சட்டம்



- நியூசிலாந்தின் பாராளுமன்றம் கருச்சிதைவு ஏற்பட்டால் அதற்காக இழப்பீட்டுடன் கூடிய விடுமுறைக்கான ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது.
- கருச்சிதைவு ஏற்பட்டால் தாய்மார்களுக்கும் அவர்களின் கணவர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறையை இச்சட்டம் வழங்குகிறது.
- உலக நாடுகளில் இந்தியாவை அடுத்து இது போன்ற சட்டத்தை இயற்றிய இரண்டாவது நாடு நியூசிலாந்து ஆகும்.
- அரசு ஊழியர்களுக்கு கருச்சிதைவு ஏற்பட்டால் அவர்கள் மூன்று நாட்கள் வரையில் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என இச்சட்டம் கூறுகிறது.

## கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 5.4% வீடுகளே நிறைவடைந்துள்ளன: மத்திய அரசு தகவல்

**Brick by brick** | Of 2.28 crore houses to be built for the rural poor under the Pradhan Mantri Awas Yojana, less than 1.27 crore had been completed by January 28, 2021, according to a Parliamentary Standing Committee's report. Another 61 lakh are under construction.

| Year | PMAY-G target | Houses built |
|---|---|---|
| FY17 | 42,64,470 | 2,115 |
| FY18 | 31,70,117 | 38,16,081 |
| FY19 | 25,14,493 | 44,72,476 |
| FY20 | 59,76,635 | 21,28,873 |
| FY21 | 63,76,580 | 22,78,087 |
| **Total** | **2,28,22,379** | **1,26,95,517** |

- States such as Assam, Chhattisgarh and Karnataka did not see even a single house, sanctioned in FY21, get completed

- கோவிட் 19 காரணமாக மத்திய அரசின் கிராமப்புற வீட்டு வசதி திட்டமான பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – கிராமின் **(PMAY-G/Pradhan Mantri awaas Yojana-Gramin)** கீழ் 2020 - 21 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட வீடுகளில் 5.6 சதவீத வீடுகள் தான் இதுவரை நிறைவடைந்துள்ளது. இந்த தகவலை கிராமப்புற ஊரக வளர்ச்சி அமைச்சகம் கடந்த மாதம் நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் தெரிவித்துள்ளது.
- **"அனைவருக்கும் வீட்டுவசதி"** என்ற இலக்கை கொண்ட பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா - கிராமின் திட்டம் அதன் கட்டுமான இலக்கில் 55 சதவீதம் மட்டுமே பூர்த்தி செய்துள்ளது, இருப்பினும் கிட்டத்தட்ட 85 சதவீத பயனாளிகளுக்கு பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்தின் கீழ் கிராமப்புற ஏழைகளுக்காக கட்டப்படவுள்ள 2.28 கோடி வீடுகளில், 2021 ஜனவரி 28 ஆம் தேதிக்குள் 1.27 கோடிக்கும் குறைவான பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும் 61 லட்சம் கட்டுமானத்தில் உள்ளன என்று இந்த மாத தொடக்கத்தில் மக்களவையில் முன்வைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரிய மராத்திய படங்கள் தேசிய திரைப்பட ஆவணக் காப்பகத்திற்கு வழிவகுக்கும்

- வடமொழி சினிமா கிளாசிக்ஸின் ஒரு பெரிய கையகப்படுத்துதலில், நகரத்தை தளமாகக் கொண்ட இந்திய தேசிய திரைப்பட ஆவணக் காப்பகத்தில் (NFAI) 89 திரைப்படங்களை சேர்த்துள்ளன, அவற்றில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மராத்தி சினிமாவின் 'கோல்டன் ஏஜ்'.
- இந்தத் தொகுப்பின் சிறப்பம்சம் இரண்டு அரிய மராத்தி படங்களாகும் - வரலாற்று Tai Teleen (1953) மற்றும் Pavanakathcha Dhondi (1966) இதுவரை இழந்ததாகக் கருதப்பட்டதாக NFAI இன் இயக்குனர் பிரகாஷ் மாக்தம் தெரிவித்தார்.
- Tai Teleen, கே.பி. பாவே (இயக்குனர்), புகழ்பெற்ற கலைஞர்களான சாந்தா ஆப்தே, சுதா ஆப்தே, நளினி போர்கர் மற்றும் ஜுசாராவ் பவார் ஆகியோர் நடித்தனர், அனந்த் தாக்கூர் இயக்கிய Pavanakathcha Dhondi 1966 தேசிய திரைப்பட விருதுகளில் 'சிறந்த மராத்தி படம்' விருது பெற்றது.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு புதிய வண்ணத்துப் பூச்சி இனம்



- அனைத்து இந்திய ஆராய்ச்சிக் குழு ஒன்றால் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து ஒரு பட்டாம்பூச்சி இனம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல்முறையாகும்.
- மேற்குத் தொடர்ச்சி மலையில் லைகேனிட் பட்டாம்பூச்சி (Lycaenid butterfly) இனத்தின் ஒரு புதியக் குழுமத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இக்குழுமமானது நாக்காடுபா பேரினத்தினைச் **(Nacaduba genus)** சேர்ந்ததாகும்.
- இந்த வண்ணத்துப் பூச்சிகளுக்கு ராமசாமியின் ஆறுவரி நீல வண்ணத்துப்பூச்சி மற்றும் **'சிலோன் வரயன்நீலி'** (Ramaswami's Six Line blue and Ceylon Varayanneeli) என்று பெயரிடப்பட்டுள்ளது.

| 3. முக்கிய நிகழ்வுகள் | விருதுகள், கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகள் |
|---|---|

**சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலை சார்பில் - தேசிய அறிவியல் நாள் விருதுகள்**

- டெல்லி ஐஐடி முன்னாள் பேராசிரியர் அஜோய் கதக்குக்கு, சாஸ்த்ரா ஜி.என்.ராமச்சந்திரன் விருது
- டெல்லி தேசிய தாவர மரபணு நிறுவனத்தைச் சேர்ந்த கீதாஞ்சலி யாதவுக்கு சாஸ்த்ரா ஒபைத் சித்திக் விருது வழங்கப்பட்டது
- வேதியியல், பொருள் அறிவியல் துறையில் சிறந்து விளங்கியதற்காக டெல்லி ஐஐடி பேராசிரியர்கள் ஏ.கே.கங்குலி, பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவன பேராசிரியர் ஜி.முகேஷ் ஆகியோருக்கு சாஸ்த்ரா - சி.என்.ஆர்.ரா விருது வழங்கப்பட்டது.

**தேசிய தலைநகர் பிரதேச மசோதாக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது**

- தேசிய தலைநகர் டெல்லி சட்டங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) இரண்டாவது (திருத்த) மசோதா, 2020 ஐ நிறைவேற்றியது - மக்களவை

**டெல்லி சட்டங்களின் தேசிய தலைநகரப் பகுதி இரண்டாவது (திருத்தம்) மசோதா, 2020:**

- இந்த மசோதா தேசிய தலைநகர் டெல்லி சட்டங்களின் (சிறப்பு ஏற்பாடுகள்) இரண்டாவது சட்டம், 2011 ஐ திருத்துகிறது. 2011 சட்டம் 31 டிசம்பர் 31 வரை செல்லுபடியாகும். இந்த காலக்கெடுவை 2023 டிசம்பர் இறுதி வரை நீட்டிக்க மசோதா முயல்கிறது.
- இந்த மசோதா 2 தகுதிகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படாத காலனிகளை முறைப்படுத்த முயல்கிறது
- ஜூன் 1,2014 நிலவரப்படி டெல்லியின் தேசிய தலைநகர் பிராந்தியத்தில் அது இருந்தது
- ஜனவரி 1,2015 நிலவரப்படி இது 50% வரை வளர்ச்சியைக் கண்டது.
- தில்லியில் சில வகையான அங்கீகரிக்கப்படாத முன்னேற்றங்களுக்கு தண்டனை நடவடிக்கைகளிலிருந்து இது போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

**பிபிசி விருதுகள்**

- கேரளாவைச் சேர்ந்த நீளம் தாண்டும் வீரர் மற்றும் ஒலிம்பிக் வீரரான அஞ்சு பாபி ஜார்ஜ் அவர்கள் இந்தியாவில் சிறந்த தடகள வீரருக்கான பிபிசி வாழ்நாள் சாதனையாளர் விருதினை வென்றுள்ளார்.
- அஞ்சு பாபி ஜார்ஜ் அவர்கள் கேரளாவின் கோட்டயத்தில் உள்ள சங்கனாச்சேரியைப் பூர்வீகமாகக் கொண்டவராவார்.
- இவர் பாரீஸில் 2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் நீளம் தாண்டுதலில் 6.70 மீட்டரைத் தாண்டி வெள்ளிப் பதக்கத்தை வென்று உள்ளார்.
- உலகத் தடகள சாம்பியன்ஷிப்பில் ஒரு பதக்கத்தை வென்ற முதலாவது இந்தியத் தடகள வீரர் இவராவார்.
- செஸ் சாம்பியன் கிராண்ட் மாஸ்டரான கோனேரு ஹம்பி அவர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான பிபிசி இந்திய விளையாட்டு வீரர் என்ற விருதினை வென்றுள்ளார்.
- துப்பாக்கி சுடும் வீரரான மானு பேக்கர் அவர்கள் பிபிசியின் இந்த ஆண்டிற்கான வளர்ந்து வரும் வீரர் என்ற விருதினை வென்றுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டில் பிபிசியானது கேரளாவைச் சேர்ந்த ஒலிம்பிக் வீராங்கனையான பி.டி. உஷாவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவித்தது.


## கிங் பூமிபால் உலக மண் தின 2020 ஆம் ஆண்டு விருது

- போபாலில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி ஆணையத்தின் (ICAR - India Council of Agricultural Research) இந்திய மண் அறிவியல் நிறுவனத்திற்குப் புகழ்பெற்ற கிங் பூமிபால் உலக மண் தின 2020 ஆம் ஆண்டு விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது ரோம் நகரில் உள்ள உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது.
- புகழ்பெற்ற இந்த உலகளாவிய விருதானது வளமான மண்ணின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திய தனது பொறுப்புமிக்க தன்மைக்காக ICAR நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## போஷன் பக்வாடா 2021

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டின் மார்ச் 16 முதல் மார்ச் 31 வரை போஷன் பக்வாடா என்ற பிரச்சாரத்தினைக் வினை கடைபிடிக்கிறது.
- போஷன் பக்வாடா தொடர்பான விவகாரங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு முதன்மைத் துறையாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை (அ) சமூக நலத்துறை செயல்படும்.
- இது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.
- உணவுப் பொருட்கள் வழங்கும் காடுகளை (Food Forestry) பயன்படுத்தி ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதும், போஷன் பஞ்சாயத்துகளை அமைப்பதும் பக்வாடாவின் முதன்மை நோக்கமாகும்.
- ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய மருத்துவ குணமிக்க தாவரங்கள் வாரியமானது ஒவ்வோர் அங்கன்வாடி நிலையங்களுக்கும் மருத்துவ குணமிக்க 4 தாவரச் செடிகளை வழங்கும்.

## உலக மகிழ்ச்சி அறிக்கை 2021



- இந்த அறிக்கையினை ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.
- ஒரு நாட்டின் குடிமக்கள் எவ்வளவு மகிழ்ச்சியை உணர்கிறார்கள் என்பதன் அடிப்படையில் இந்த அறிக்கை 149 நாடுகளைப் பட்டியலிடுகிறது.
- தொடர்ச்சியாக நான்காவது வருடமும் உலகின் மிகவும் மகிழ்ச்சியான நாடாக பின்லாந்து மீண்டும் முடிசூட்டப்பட்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து ஐஸ்லாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, சுவீடன், ஜெர்மனி மற்றும் நார்வே ஆகிய நாடுகள் உள்ளன.
- 149 நாடுகளில் இந்தியா 139வது இடத்தில் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியா 140வது இடத்தில் இருந்தது.
- இந்தியாவின் அண்டை நாடுகளில், பாகிஸ்தான் 105வது இடத்தையும், சீனா 84வது இடத்தையும், இலங்கை 129வது இடத்தையும், வங்கதேசம் 101வது இடத்தையும் பிடித்துள்ளன.
- போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியற்றவர்களாக இந்தப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளனர்
- அவற்றைத் தொடர்ந்து ஜிம்பாப்வே (148), ருவாண்டா (147), போட்ஸ்வானா (146), லெசோதோ (145) ஆகிய நாடுகள் உள்ளன.

## ஹுருன் இந்தியா சொத்து அறிக்கை 2020

- இந்த அறிக்கை இந்தியாவில் ஆண்டுக்கு சராசரியாக ரூ.20 லட்சம் என்ற அளவில் சராசரி சேமிப்பினைக் கொண்ட 'புதிய நடுத்தர வர்க்கம்' என்ற ஒரு புதிய குடும்ப வகையை அடையாளம் கண்டறிந்துள்ளது.
- இந்தியாவில் மொத்தம் 4.12 லட்சம் என்ற அளவிற்கு லட்சாதிபதிக் குடும்பங்கள் (டாலர் மதிப்பில்) உள்ளன.
- 4,593 என்ற நிலையில், மிக அதிக நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் எனும் பிரிவில் உலகளவில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், சீனா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- மொத்த லட்சாதிபதிக் குடும்பங்களில் 46 சதவீதத்தினர் மகாராஷ்டிரா (56,000), உத்தரப் பிரதேசம் (36,000), தமிழ்நாடு (35,000), கர்நாடகா (33,000), குஜராத் (29,000) ஆகிய மாநிலங்களில் வசிக்கின்றனர்.
- நகர வாரியாக, மும்பையில் அதிக லட்சாதிபதிகள் (16,933) உள்ளனர். அதனையடுத்து, டெல்லி (16,000), கொல்கத்தா (10,000), பெங்களூரு (7,582) மற்றும் சென்னை (4,685) ஆகிய நகரங்கள் உள்ளன.




## தேசிய விருதுகள் அறிவிப்பு



**தேசிய விருதுகள்: முழுப் பட்டியல்**

- சிறந்த படம் - மரைக்காயர் (மலையாளம்)
- சிறந்த இயக்குநர் - சஞ்சய் பூரண் சிங் சௌகான் (ஹிந்தி)
- சிறந்த நடிகை - கங்கனா ரணாவத் (மணிகர்னிகா & பங்கா)
- சிறந்த நடிகர் - தனுஷ் (அசுரன்), மனோஜ் பாஜ்பாய் (போஸ்லே)
- சிறந்த அறிமுக இயக்குநர் - மதுகுட்டி சேவியர் (ஹெலன்)
- நர்கீஸ் தத் தேசிய ஒருமைப்பாடு விருது - தாஜ்மஹால் (மராத்தி)
- சிறந்த பொழுதுபோக்குப் படம் - மஹர்ஷி (தெலுங்கு)
- சமூக நலனுக்கான சிறந்த படம் - ஆனந்தி கோபால் (மராத்தி)
- சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான சிறந்த படம் - வாட்டர் பரியல் (மோன்பா)
- சிறந்த துணை நடிகர் - விஜய் சேதுபதி
- சிறந்த துணை நடிகை - பல்லவி ஜோஷி
- சிறந்த குழந்தை நட்சத்திரம் - நாக விஷால் (கேடி (எ) கருப்புதுரை)
- சிறந்த பாடகர் - பி ப்ராக் (கேசரி, ஹிந்தி)
- சிறந்த பாடகி - சவானி ரவிந்திரா (பார்டோ, மராத்தி)
- சிறந்த வசனம் - தி தாஷ்கண்ட் ஃபைல்ஸ் (ஹிந்தி)
- சிறந்த திரைக்கதை (தழுவல்) - கும்நமி
- சிறந்த அசல் திரைக்கதை - ஜேயஸ்தோபுத்ரோ (வங்காளம்)
- சிறந்த ஒலி அமைப்பு (Re-recordist of final mixed track) - ரசூல் பூக்குட்டி (ஒத்த செருப்பு)
- சிறந்த ஒலி அமைப்பு - லியுடஹ் (காஸி)
- சிறந்த படத்தொகுப்பு - நவீன் நூலி (ஜெர்ஸி, தெலுங்கு)
- சிறந்த கலை இயக்கம் - ஆனந்தி கோபால் (மராத்தி)
- சிறந்த ஒப்பனை - ரஞ்சித் (ஹெலன், மலையாளம்)
- சிறந்த இசையமைப்பாளர் - இமான் (விஸ்வாசம்)
- சிறந்த பின்னணி இசை - பிரபுத்தா பானர்ஜி (வங்காளம்)
- சிறந்த பாடலாசிரியர் - பிரபா வர்மா (கொலாம்பி, மலையாளம்)
- சிறந்த ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் - மரைக்காயர் (மலையாளம்)
- சிறந்த நடனம் - ராஜு சுந்தரம் (மஹர்ஷி, தெலுங்கு)
- திரையுலகுக்கு ஏற்ற மாநிலம் - சிக்கிம்
- சிறப்பு விருது - ஒத்த செருப்பு
- சிறந்த ஆடை வடிவமைப்பு - சுஜித் சுதாகரன், வி. சாய் (மரைக்காயர், மலையாளம்)
- சிறந்த சண்டை இயக்கம் - அவனே ஸ்ரீமன்நாராயணா (கன்னடம்)
- சிறந்த ஒளிப்பதிவு - கிரிஷ் கங்காதரன் (ஜல்லிக்கட்டு, மலையாளம்)
- சிறந்த குழந்தைகள் படம் - கஸ்தூரி (ஹிந்தி)

## காந்தி அமைதிப் பரிசு




- இந்திய அரசின் கலாச்சாரத் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதிப் பரிசினை பங்கபந்து ஷேக் முஜிபூர் ரஹ்மானிற்கு வழங்கியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான பரிசு ஓமனின் சுல்தான் கபூஸ் பின் சையத் அல் சையத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- ஷேக் முஜிபூர் ரஹ்மான் அவர்கள் வங்க தேசத்தின் முதல் குடியரசுத் தலைவர் மற்றும் முதல் பிரதம அமைச்சர் ஆவார்.
- இவர் அந்நாட்டின் "தேசத் தந்தை" (அ) "முஜிப்" என அழைக்கப்பட்டார்.
- 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இவர் படுகொலை செய்யப்பட்டார்.
- இப்பரிசு இந்திய அரசால் வழங்கப்படும் ஒரு சர்வதேச காந்தி அமைதிப் பரிசாகும்.
- இவ்விருது 1995 ஆம் ஆண்டில் மோகன்தாஸ் காந்தியின் 125வது பிறந்தநாள் விழா அன்று தொடங்கப்பட்டது.
- இவ்விருது இனம், தேசம், பாலினம் (அ) சமய நம்பிக்கை என எதையும் சாராமல் அனைத்து நபர்களுக்கும் வழங்கப்படக் கூடியதாகும்.

**காந்தி பரிசு பெற்றவர்கள்**

| எண் | ஆண்டு | பெயர் | நாடு | விவரம் |
|---|---|---|---|---|
| 1. | 1995 | ஜுலியஸ் நைரேரே | தன்சானியா | முதல் டான்சானியா குடியரசு தலைவர் |
| 2. | 1996 | A. T. ஆரியரத்னே | இலங்கை | சர்வோதயா ஷ்ரமதான இயக்கத்தின் நிறுவனர் |
| 3. | 1997 | கெர்ஹார்ட் ஃபிஷர் | ஜெர்மனி | ஜெர்மன் தூதர், போலியோ மற்றும் வெண்குட்ட நோய்களுக்கெதிரான அவர் பணியை பாராட்டி |
| 4. | 1998 | ராமகிருஷ்ண மிசன் | இந்தியா | சுவாமி விவேகாநந்தர் நிறுவியது |
| 5. | 1999 | பாபா ஆம்தே | இந்தியா | சமூகப் பணியாளர் |
| 6. | 2000 | நெல்சன் மண்டேலா (கூட்டாக) | தென் ஆப்ரிக்கா | முன்னாள் தென்னாப்பிரிக்கா அதிபர் |
| | 2000 | கிராமின் வங்கி (கூட்டாக) | வங்காளத்தேசம் | முகமது யூனுஸ் நிறுவியது |
| 7. | 2001 | ஜான் ஹூம் | ஐக்கிய பேரரசு | வட அயர்லாந்து அரசியலாளர் |
| 8. | 2002 | பாரதிய வித்தியா பவன் | இந்தியா | இந்திய கலாச்சாரத்தை வலியுறுத்தும் கல்வி அறக்கட்டளை |

| எண் | ஆண்டு | பெயர் | நாடு | விவரம் |
|---|---|---|---|---|
| 9. | 2003 | வாக்லாவ் ஹவேல் | செக் குடியரசு | செக்கோஸ்லோவேகியாவின் கடைசி அதிபரும் செக் குடியரசின் முதல் அதிபரும் |
| 10. | 2004 | கொரெட்டா ஸ்காட் கிங் | அமெரிக்கா | மார்ட்டின் லூதர் கிங்கின் மனைவி |
| 11. | 2005 | டெசுமான்ட் டுட்டு | தென் ஆப்ரிக்கா | தென்னாப்பிரிக்க பாதிரியார் மற்றும் செயல்திறனாளர் |
| 12. | 2013 | சாந்திபிரசாத் பட் (Chandi Prasad Bhatt) | இந்தியா | சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆர்வலர் |
| 13. | 2014 | இஸ்ரோ | இந்தியா | இந்திய அரசின் விண்வெளி நிறுவனம் |
| 14. | 2015 | விவேகானந்த கேந்திரம் | இந்தியா | கிராமப்புற வளர்ச்சி, கல்வி, இயற்கைவள மேம்பாடு ஆகியவற்றில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காக கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்த கேந்திரா 2015 - ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. |
| 15. | 2016 | அட்சய பாத்திரா அறக்கட்டளை | இந்தியா | இந்தியாவெங்கிலும் உள்ள பல மில்லியன் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்ததில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காக அக்சய பாத்திர அறக்கட்டளை மற்றும் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றுவதை ஒழிப்பது மற்றும் துப்புரவு நிலையை மேம்படுத்துவதில் தனது பங்களிப்பை ஆற்றியது ஆகியவற்றிற்காக பணியாற்றிய சுலப் இண்டர்நேஷனல் என்ற நிறுவனம் ஆகிய இரண்டும் கூட்டாக 2016 - ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன |
| | 2016 | சுலப் இண்டர்நேஷனல் | இந்தியா | |
| 16. | 2017 | ஏகல் அபியான் அறக்கட்டளை | இந்தியா | இந்தியா முழுவதுமான மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில், கிராமப்புற மேம்பாடு, பாலின மற்றும் சமூக சமத்துவம் ஆகியவற்றிற்கு தனது பங்களிப்பை ஆற்றியதற்காகவும் கிராமப்புற மற்றும் பழங்குடியின குழந்தைகளுக்கு கல்வியை அளித்தலில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காகவும் ஏகல் அபியான் அறக்கட்டளை 2017 - ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. |
| 17. | 2018 | யோஹேய் சசாகாவா | ஜப்பான் | உலகெங்கிலும் மற்றும் இந்தியா முழுவதிலும் தொழுநோய் ஒழிப்பில் தனது பங்களிப்பை ஆற்றியதற்காக யோஹேய் சசாகாவா 2018 - ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். |
| 18. | 2019 | காபூசு பின் சயீது அல் சயீது | ஓமான் | காந்திய வழியில் ஓமன் நாட்டை சமூக, பொருளாதாரம் மற்றும் அரசியல் உள்ளிட்டவற்றை மேம்படுத்திக் காட்டியதன் காரணமாக, ஓமன் மன்னருக்கு இந்த விருது வழங்க முடிவு செய்யப்பட்டதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். |
| 19. | 2020 | சேக் முஜிபுர் ரகுமான் | வங்காளத்தேசம் | அகிம்சை மற்றும் பிற காந்திய முறைகள் மூலம் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்திற்கான அவரது பங்களிப்புகளுக்கு. |

## சிந்து நதி நீர் பகிர்வு... 2 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை

- சிந்து நதி நீரை இந்தியாவும் பாகிஸ்தானும் பகிர்ந்துகொள்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, 1960 - ல் கொண்டுவரப்பட்ட இந்த ஒப்பந்தம், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மிக நீடித்த ஒப்பந்தங்களில் ஒன்றாகும். இந்த ஒப்பந்தத்தின்படி தரவுகளை பகிர்ந்துகொள்வதற்காகவும், ஒப்பந்தப்படி நீரை பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காகவும் நிரந்தர சிந்து ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- கடைசியாக 2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரு நாடுகளின் சிந்து நதி ஆணைய உறுப்பினர்கள் லாகூரில் சந்தித்து பேசினர். அதன்பின்னர், புல்வாமா தாக்குதல் காரணமாக 2019ல் கூட்டம் நடைபெறவில்லை. கடந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாக கூட்டம் நடத்தப்படவில்லை.

## தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் சார்பில் தேசிய கல்வி மாநாடு: இணையவழியில் ஏற்பாடு

- தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம் சார்பில் ஐந்து நாள்கள் நடைபெறும் தேசிய கல்வி மாநாடு (‘திங் எஜு’) இணையவழியில் தொடங்கவுள்ளது.
- இந்த மாநாடு இதுவரை எட்டு முறை நடத்தப்பட்டுள்ளது.

## SERB மகளிர் சிறப்பு விருது

- ஹைதராபாத்தை சேர்ந்த தேசிய விலங்குகள் உயிரித் தொழில்நுட்ப நிறுவன (NIAB - National Institute of Animal Biotechnology) அறிவியலாளர் சோனு காந்தி SERB மகளிர் சிறப்பு விருதினைப் பெற்றுள்ளார்.
- இவர் சமீபத்தில் முடக்குவாதம், இருதய நோய்கள் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் (Japanese encephalitis) போன்ற நோய்களைக் கண்டறிவதற்கான ஒரு அதிதிறன் நானோ உபகரணத்தை வடிவமைத்துள்ளார்.
- இந்த விருது அறிவியல் மற்றும் தொழில்நட்பத் துறையின் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தினால் (SERB - Science and Engineering Research Board) தொடங்கப்பட்டது.
- அறிவியல் மற்றும் பொறியியலில் சிறந்து விளங்கும் இளம் சாதனைப் பெண்மணிகளுக்கு இவ்விருது அங்கீகாரத்தையும் விருதினையும் வழங்குகிறது.

## தேசிய உயிரிமருந்துத் திட்டம்

- அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற தேசிய உயிரி மருந்துத் திட்டத்தினை உயிரி தொழில்நுட்பத் துறை (DBT - Department of Biotechnology) தொடங்கியுள்ளது.
- இத்திட்டம் இந்தியா முழுவதுமுள்ள வளர்ந்துவரும் உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்திப் பொருட்களின் ஆரம்பகால உற்பத்தி நிலையில் ஏற்படும் இடையூறுகளை எதிர்கொள்வதற்கு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவுவதற்காக தேசிய உயிரி மருந்துத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் மேம்பட்ட தொழில் மற்றும் கல்விக்கிடையேயான இணைப்பிற்கு உதவுவதன் மூலம் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கிறது.
- இத்திட்டம் கல்வியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோருக்கு வழிகாட்டுதலையும் பயிற்சியையும் வழங்குகிறது.

## தகவல் சமூகம் மீதான உலக மாநாடு மன்றம் 2021

- தகவல் சமூகம் மீதான உலக மாநாடு மன்றம் 2021 (World Summit on the Information Society – Wsis) என்ற மாநாடானது "வளர்ச்சிக்கான தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பச் சமுதாயத்தின் உலகின் மிகப்பெரிய வருடாந்திர ஒன்றிணைவாகும்."
- இம்மன்றம் யுனெஸ்கோ, ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம், ஐ.நா.வின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு மற்றும் சர்வதேச தொலைதொடர்பு ஒன்றியம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- பாரத்நெட் என்ற முதன்மை திட்டத்தின் கீழ், 4,00,000 கி.மீக்கும் மேலான நீளத்திற்கு ஒளியிழை கம்பி வடங்களை அமைப்பதன் மூலம் செயற்கைக்கோள் தொடர்பு சேவைகளைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட 6,00,000 கிராமங்கள் இணைக்கப்படுகின்றன என்று தொலைதொடர்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
- கடலுக்கடியில் மூழ்கிய கம்பிவட அமைப்புகள் மூலம் சிறிய மற்றும் தொலைதூர தீவுகளான அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் மற்றும் இதர அணுக இயலாத பகுதிகள் அரசின் நிதியுதவியுடன் இணைக்கப்படுகின்றன.

ARUL IAS ACADEMY

# 4. செய்திகளில் நபர் | செய்திகளில் குறிப்பிட்ட நபர்கள்

### இந்தியாவில் 70 பெரும் கோடீஸ்வரர்கள்: நம்பர் ஒன் பணக்காரர் முகேஷ் அம்பானி

- சீனாவை சேர்ந்த ஆய்வு நிறுவனமான ஹுருன் 2021ம் ஆண்டிற்கான உலக பணக்காரர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை தயாரித்து வெளியிட்டுள்ளது.
- உலக பணக்காரர்கள் பட்டியலில், 'டெஸ்லா' நிறுவனர் எலான் மஸ்க் முதல் இடத்திலும், 'அமேசான்' நிறுவனர் ஜெப் பெசோஸ் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர். முகேஷ் அம்பானி எட்டாவது இடத்தை பிடித்துள்ளார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### படமாகும் மோடியின் வாழ்க்கை

- பிரதமர் நரேந்திர மோடி வாழ்க்கை கதை ஏற்கனவே பி.எம். நரேந்திர மோடி என்ற பெயரில் சினிமா படமாக வெளிவந்தது. இதில் மோடி கதாபாத்திரத்தில் விவேக் ஓபராய் நடித்து இருந்தார். தற்போது நரேந்திர மோடி வாழ்க்கையை மையமாக வைத்து இன்னொரு இந்தி படமும் தயாராகிறது.
- இந்த படத்துக்கு ஏக் அவுர் நரேன் என்று பெயர் வைத்துள்ளனர். இந்த படத்தை பிரபல வங்க மொழி இயக்குனர் மிலன் பவுமிக் டைரக்டு செய்கிறார். இவர் டெல்லியில் பாலியல் வன்கொடுமையால் மரணம் அடைந்த நிர்பயா கதையை படமாக்கி பிரபலமானவர்.

### அப்துல் கலாமின் மூத்த சகோதரர் முகமது முத்து மீரான் லெப்பை மரைக்காயர் காலமானார்

- மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின், மூத்த சகோதர் முகமது முத்து மீரான் லெப்பை மரைக்காயர். 104 வயதான இவர், ராமேஸ்வரத்தில் உள்ள அவரது இல்லத்தில் (மார்ச் 7) காலமானார்.

### அறிவியல் தமிழறிஞர் இராம. சுந்தரம் காலமானார்



- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத் தலைவரும், அறிவியல் தமிழறிஞருமான இராம. சுந்தரம் (82) உடல் நலக் குறைவு காரணமாக தஞ்சாவூரில் அவரது இல்லத்தில் (மார்ச் 8) காலமானார்.
- இவர் 10 - க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். மேலும், பதிப்பாசிரியராக இருந்து 35 - க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழ், ஆங்கிலம், மலையாளம், போலிஷ் ஆகிய மொழிகளில் ஏறத்தாழ 200 கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பல்வேறு அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## தான்சானியா அதிபர் காலமானார்!



- தான்சானியா நாட்டின் அதிபர் ஜான் மகபுலி உடல்நலக்குறைவு காரணமாக காலமானார்.
- திடீரென ஏற்பட்ட இதய செயலிழப்பு காரணமாக கடந்த 17-ம் தேதி மாலை 6 மணியளவில் அவர் காலமானதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 1959 இல் வடமேற்கு தான்சானியாவின் சாட்டோவில் பிறந்தார்
- தார் எஸ் சலாம் பல்கலைக்கழகத்தில் வேதியியல் மற்றும் கணிதம் படித்தார்
- வேதியியல் மற்றும் கணித ஆசிரியராக பணியாற்றினார்
- முதன்முதலில் எம்.பி.யாக 1995 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்
- 2000 ல் அமைச்சரவை அமைச்சரானார்
- முதல் ஜனாதிபதியாக 2015 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்

## தான்சானியாவில் முதல் பெண் அதிபர்



- ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் 2015-ம் ஆண்டு முதல் அதிபராக இருந்து வந்தவர் ஜான் மாகுபுலி (வயது 61).
- இவர் இருதய நோய் காரணமாக உயிரிழந்தார்.
- தான்சானியா நாட்டின் அரசியல் சாசனத்தின்படி, பதவியில் இருக்கும்போது அதிபர் இறந்துவிட்டால் துணை அதிபர், அதிபர் பதவியை ஏற்பார்.
- அதன்படி அந்த நாட்டின் துணை அதிபரான சமியா சுலுகு ஹசன், தான்சானியாவின் 6-வது அதிபராக பதவி ஏற்றுக்கொண்டார்.
- இதன் மூலம் தான்சானியாவின் முதல் பெண் அதிபர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

## கூகுள் நிறுவனத்திலிருந்து சென் குப்தா ராஜினாமா!



- உலகின் பிரமாண்ட வலைத் தேடல் பொறியான கூகுள், "எங்கள் நிறுவனத்தில் 15 ஆண்டுகள் பணியாற்றிய சென்குப்தா, குரோம், நெக்ஸ்ட் பில்லியன் யூஸர்ஸ், கூகுள் பே போன்றவற்றை உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகித்தவர். தற்போது கூகுள் நிறுவனத்தைவிட்டு விலகுவதாக அவர் தனிப்பட்ட முடிவை எடுத்துள்ளார்.

## அமெரிக்கா: டுவிட்டர் நிறுவனரின் முதல்பதிவு ரூ.21 கோடிக்கு ஏலம்

- (டுவிட்டர்) சமூக ஊடக நிறுவனத்தை நிறுவியவர்களில் ஒருவரும் அந்த நிறுவனத்தின் தலைமை செயதிகாரியுமான ஜாக் டார்சி, அந்த ஊடகத்தில் முதல்முறையாக வெளியிட்ட பதிவு 29 லட்சம் டாலருக்கு (சுமார் ரூ.21 கோடி) ஏலத்தில் விற்பனையாகியுள்ளது.
- 2006 - ஆண்டு மார்ச் மாதத்தில் பதிவிடப்பட்ட, 'எனது டுவிட்டுரையை நிறுவுகிறேன்' என்ற குறுகிய வாசகத்தைக் கொண்ட அந்தப் பதிவின் மின்னணு வடிவை ஏலத்தில் விடப் போவதாக 2 வாரங்களுக்குப் பிறகு, அது இந்தத் தொகைக்கு விற்பனையாகியுள்ளது.

## NV ரமணா – அடுத்த இந்தியத் தலைமை நீதிபதி




- இந்தியத் தலைமை நீதிபதி சரத் SA பாப்தே அவர்கள் அடுத்த மாதம் ஓய்வு பெற உள்ளதால், அவரையடுத்து 48வது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க NV ரமணாவின் பெயரை அவர் பரிந்துரை செய்துள்ளார்.
- SA பாப்தே ஏப்ரல் 23 அன்று ஓய்வு பெற உள்ளார்.
- நீதிபதி ரமணா அவர்கள் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

## இந்தியத் தலைமை நீதிபதி

- **இந்தியத் தலைமை நீதிபதி** (*Chief Justice of India*) என்பது **இந்திய உச்ச நீதிமன்றத்தின்** மிக உயர்ந்த நீதிபதிப் பதவியாகும்.

## இந்தியத் தலைமை நீதிபதிகளின் பட்டியல்

- **இந்தியத் தலைமை நீதிபதிகளின் பட்டியல்** கீழே தரப்பட்டுள்ளது. இந்தியாவின் உச்சநீதிமன்றம் 1950இல் நிறுவப்பட்டதிலிருந்து மொத்தம் 47 தலைமை நீதிபதிகள் பணியாற்றியுள்ளனர். தற்போதைய தலைமை நீதிபதியாக எஸ். ஏ. பாப்டே என்பவர் 18 நவம்பர், 2019 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வருகிறார்.

## இந்திய நடுவண் நீதிமன்றம் (1937 - 1950)

- **நடுவண் நீதிமன்றம்** *(Federal Court of India)* 1937 அக்டோபர் 1 இல் நிறுவப்பட்டது. இது தில்லியில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடியது. இந்நீதிமன்றத்தில் **தலைமை நீதிபதியும்**, இரண்டு கீழ்நிலை நீதிபதிகளும் உறுப்பினர்களாக இருந்தனர். இந்நீதிமன்றம் 1950 ஜனவரி 28 இல் இந்திய **உச்ச நீதிமன்றமாக** மாற்றப்பட்டது.

| எண் | பெயர் | பதவிக் காலம் | | பதவி வகித்த நாட்கள் | அமைப்பு | நியமித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சர் மோரிசு குவையர் | 1 அக்டோபர் 1937 | 25 ஏப்ரல் 1943 | 2,032 | இன்னர் டெம்பிள் | |
| பதில் (Acting) | சர் சிறினிவாசு வரதாச்சாரியார் | 25 ஏப்ரல் 1943 | 7 ஜூன் 1943 | 43 | | இரண்டாம் லின்லித்கொ பிரபு |
| 2 | சர் பட்ரிக் இசுப்பென்சு | 7 ஜூன் 1943 | 14 ஆகஸ்ட் 1947 | 1,529 | இன்னர் டெம்பிள் | |
| 3 | சர் எச். ஜே. கானியா | 14 ஆகஸ்ட் 1947 | 26 ஜனவரி 1950 | 896 | பம்பாய் உயர் நீதிமன்றம் | மவுண்ட்பேட்டன் பிரபு |

## இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள்

- **இந்தியா** குடியரசானதைத் தொடர்ந்து **இந்திய உச்ச நீதிமன்றம்** தனது முதல் அமர்வை ஜனவரி 28, 1950 ஆம் ஆண்டு துவங்கியது. அது முதல் தற்போது வரை 47 பேர் **இந்தியத் தலைமை நீதிபதியாக** பதவி வகித்துள்ளனர். தற்போது, **எஸ். ஏ. பாப்டே** என்பவர் 47வது இந்தியத் தலைமை நீதிபதியாக நவம்பர் 18, 2019 முதல் கடமையாற்றி வருகிறார்.

| எண். | பெயர் | பதவி ஆரம்பம் | பதவி முடிவு | பதவி வகித்த நாட்கள் | அமைப்பு | நியமித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | எச். ஜே. கனியா | 26 ஜனவரி 1950 | 6 நவம்பர் 1951 | 649 | பம்பாய் உயர் நீதிமன்றம் | இராசேந்திர பிரசாத் |
| 2 | எம். பதஞ்சலி சாஸ்திரி | 7 நவம்பர் 1951 | 3 ஜனவரி 1954 | 788 | சென்னை உயர் நீதிமன்றம் | |
| 3 | மேர் சந்த் மகாஜன் | 4 ஜனவரி 1954 | 22 டிசம்பர் 1954 | 352 | கிழக்கு பஞ்சாப் உயர் நீதிமன்றம் | |
| 4 | பிஜன் குமார் முகர்ஜி | 23 டிசம்பர் 1954 | 31 ஜனவரி 1956 | 404 | கல்கத்தா உயர் நீதிமன்றம் | |

| எண். | பெயர் | பதவி ஆரம்பம் | பதவி முடிவு | பதவி வகித்த நாட்கள் | அமைப்பு | நியமித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 5 | சுதி ரஞ்சன் தாஸ் | 1 பிப்ரவரி 1956 | 30 செப்டம்பர் 1959 | 1,337 | கல்கத்தா உயர் நீதிமன்றம் | |
| 6 | புவனேஷ்வர் பிரசாத் சின்கா | 1 அக்டோபர் 1959 | 31 ஜனவரி 1964 | 1,583 | பாட்னா உயர் நீதிமன்றம் | |
| 7 | பி. பி. கஜேந்திரகத்கர் | 1 பிப்ரவரி 1964 | 15 மார்ச் 1966 | 773 | பம்பாய் உயர் நீதிமன்றம் | சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் |
| 8 | எ. கே. சர்க்கார் | 16 மார்ச் 1966 | 29 ஜூன் 1966 | 105 | கல்கத்தா உயர் நீதிமன்றம் | |
| 9 | கே. சுப்பா ராவ் | 30 ஜூன் 1966 | 11 ஏப்ரல் 1967‡ | 285 | சென்னை உயர் நீதிமன்றம் | |
| 10 | கைலாஷ் நாத் வாங்சோ | 12 ஏப்ரல் 1967 | 24 பிப்ரவரி 1968 | 318 | அலகாபாத் உயர் நீதிமன்றம் | |
| 11 | எம். இதயத்துல்லா[3] | 25 பிப்ரவரி 1968 | 16 டிசம்பர் 1970 | 1,025 | பம்பாய் உயர் நீதிமன்றம் | சாகிர் உசேன் |
| 12 | ஜெயந்திலால் சோட்டலால் ஷா | 17 டிசம்பர் 1970 | 21 ஜனவரி 1971 | 35 | பம்பாய் உயர் நீதிமன்றம் | வி. வி. கிரி |
| 13 | எஸ். எம். சிக்ரி | 22 ஜனவரி 1971 | 25 ஏப்ரல் 1973 | 824 | லாகூர் உயர் நீதிமன்றம் | |
| 14 | எ. என். ரே | 26 ஏப்ரல் 1973 | 27 ஜனவரி 1977 | 1,372 | கல்கத்தா உயர் நீதிமன்றம் | |
| 15 | மிர்சா அமிதுல்லா பேக் | 28 ஜனவரி 1977 | 21 பிப்ரவரி 1978 | 389 | அலகாபாத் உயர் நீதிமன்றம் | பக்ருதின் அலி அகமது |
| 16 | ஒய். வி. சந்திரகுட் | 22 பிப்ரவரி 1978 | 11 ஜூலை 1985 | 2,696 | பம்பாய் உயர் நீதிமன்றம் | நீலம் சஞ்சீவ ரெட்டி |
| 17 | பி. என். பகவதி | 12 ஜூலை 1985 | 20 டிசம்பர் 1986 | 526 | குஜராத் உயர் நீதிமன்றம் | ஜெயில் சிங் |
| 18 | ஆர். எஸ். பதக் | 21 டிசம்பர் 1986 | 18 ஜூன் 1989 | 940 | அலகாபாத் உயர் நீதிமன்றம் | |
| 19 | இ. எஸ். வெங்கட்டராமய்யா | 19 ஜூன் 1989 | 17 டிசம்பர் 1989 | 181 | கர்நாடக உயர் நீதிமன்றம் | ரா. வெங்கட்ராமன் |
| 20 | எஸ். முகர்ஜி | 18 டிசம்பர் 1989 | 25 செப்டம்பர் 1990 | 281 | கல்கத்தா உயர் நீதிமன்றம் | |
| 21 | ரங்கநாத் மிஸ்ரா | 26 செப்டம்பர் 1990 | 24 நவம்பர் 1991 | 424 | ஒரிசா உயர் நீதிமன்றம் | |
| 22 | கமல் நரேன் சிங் | 25 நவம்பர் 1991 | 12 டிசம்பர் 1991 | 17 | அலகாபாத் உயர் நீதிமன்றம் | |
| 23 | எம். எச். கானியா | 13 டிசம்பர் 1991 | 17 நவம்பர் 1992 | 340 | பம்பாய் உயர் நீதிமன்றம் | |
| 24 | லலித் மோகன் சர்மா | 18 நவம்பர் 1992 | 11 பிப்ரவரி 1993 | 85 | பாட்னா உயர் நீதிமன்றம் | சங்கர் தயாள் சர்மா |

| எண். | பெயர் | பதவி ஆரம்பம் | பதவி முடிவு | பதவி வகித்த நாட்கள் | அமைப்பு | நியமித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 25 | எம். என். வெங்காடாச்சலய்யா | 12 பிப்ரவரி 1993 | 24 அக்டோபர் 1994 | 619 | கர்நாடக உயர் நீதிமன்றம் | |
| 26 | எ. எம். அகமதி | 25 அக்டோபர் 1994 | 24 மார்ச் 1997 | 881 | குஜராத் உயர் நீதிமன்றம் | |
| 27 | ஜே. எஸ். வர்மா | 25 மார்ச் 1997 | 17 ஜனவரி 1998 | 298 | மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் | |
| 28 | எம். எம். புன்சி | 18 ஜனவரி 1998 | 9 அக்டோபர் 1998 | 264 | பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றம் | கே. ஆர். நாராயணன் |
| 29 | எ. எஸ். ஆனந் | 10 அக்டோபர் 1998 | 11 ஜனவரி 2001 | 824 | ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றம் | |
| 30 | எஸ். பி. பரூச்சா | 11 ஜனவரி 2001 | 6 மே 2002 | 480 | பம்பாய் உயர் நீதிமன்றம் | |
| 31 | பி. என். கிர்பால் | 6 மே 2002 | 8 நவம்பர் 2002 | 186 | தில்லி உயர் நீதிமன்றம் | |
| 32 | ஜி. பி. பட்நாயக் | 8 நவம்பர் 2002 | 19 டிசம்பர் 2002 | 41 | ஒரிசா உயர் நீதிமன்றம் | ஆ. ப. ஜெ. அப்துல் கலாம் |
| 33 | வி. என். கரே | 19 டிசம்பர் 2002 | 2 மே 2004 | 500 | அலகாபாத் உயர் நீதிமன்றம் | |
| 34 | எஸ். இராஜேந்திர பாபு | 2 மே 2004 | 1 ஜூன் 2004 | 30 | கர்நாடக உயர் நீதிமன்றம் | |
| 35 | ஆர். சி. லகோத்தி | 1 ஜூன் 2004 | 1 நவம்பர் 2005 | 518 | மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் | |
| 36 | யோகேஷ் குமார் சபர்வால் | 1 நவம்பர் 2005 | 13 ஜனவரி 2007 | 438 | தில்லி உயர் நீதிமன்றம் | |
| 37 | கொ. கோ. பாலகிருஷ்ணன் | 13 ஜனவரி 2007 | 11 மே 2010 | 1,214 | கேரள உயர் நீதிமன்றம் | |
| 38 | எஸ். எச். கபாடியா | 12 மே 2010 | 28 செப்டம்பர் 2012 | 870 | பம்பாய் உயர் நீதிமன்றம் | பிரதிபா பாட்டில் |
| 39 | அல்தமஸ் கபீர் | 29 செப்டம்பர் 2012 | 18 ஜூலை 2013 | 292 | கல்கத்தா உயர் நீதிமன்றம் | பிரணப் முகர்ஜி |
| 40 | ப. சதாசிவம் | 19 ஜூலை 2013 | 26 ஏப்ரல் 2014 | 281 | சென்னை உயர் நீதிமன்றம் | |
| 41 | ஆர். எம். லோதா | 27 ஏப்ரல் 2014 | 27 செப்டம்பர் 2014 | 153 | இராஜஸ்தான் உயர் நீதிமன்றம் | |
| 42 | எச். எல். தத்து | 28 செப்டம்பர் 2014 | 2 டிசம்பர் 2015 | 430 | கர்நாடக உயர் நீதிமன்றம் | |

| எண். | பெயர் | பதவி ஆரம்பம் | பதவி முடிவு | பதவி வகித்த நாட்கள் | அமைப்பு | நியமித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 43 | தி. சி. தாக்கூர் | 3 டிசம்பர் 2015 | 3 ஜனவரி 2017 | 397 | ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றம் | |
| 44 | சகதீசு சிங் கேகர் | 4 ஜனவரி 2017 | 27 ஆகஸ்ட் 2017 | 235 | பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றம் | |
| 45 | தீபக் மிஸ்ரா | 28 ஆகஸ்ட் 2017 | 02 அக்டோபர் 2018 | 400 | ஒரிசா உயர் நீதிமன்றம் | ராம் நாத் கோவிந்த் |
| 46 | ரஞ்சன் கோகோய் | 03 அக்டோபர் 2018 | 17 நவம்பர் 2019 | 917 | குவஹாத்தி உயர் நீதிமன்றம் | |
| 47 | எஸ். ஏ. பாப்டே | 18 நவம்பர் 2019 | பதவியில் | 506 | பம்பாய் உயர் நீதிமன்றம் | ராம் நாத் கோவிந்த் |
| 48 | **என். வி. ரமணா** | 24 ஏப்ரல் **2021** | 26 ஆகஸ்ட் 2021 | | **தில்லி உயர் நீதிமன்றம்** | |

## 2020 ஆம் ஆண்டின் சிறந்த EY தொழில்முனைவர்





- மரிகோ நிறுவனத்தின் தலைவர் ஹர்ஷ் C. மரிவாலா, 2020 ஆம் ஆண்டிற்கான சிறந்த EY தொழில் முனைவராக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- இவர் ஜீன் மாதத்தில் நடைபெற உள்ள ஆண்டின் சிறந்த EY உலகத் தொழில்முனைவர் விருது வழங்கும் விழாவில் இந்தியாவின் பிரதிநிதியாக பங்கேற்க உள்ளார்.
- மரிகோ நிறுவனம் நாட்டில் மிகவும் அதிகமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களைத் தயாரிக்கும் மிகப்பெரிய மற்றும் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகும்.
- அது பாராசூட் மற்றும் சபோலா போன்ற பிராண்டுகளைச் சொந்தமாக கொண்டது ஆகும்.

## தொடர்ந்து 5-வது மாதமாக ரூ.1 லட்சம் கோடியை கடந்தது ஜிஎஸ்டி வசூல்

- பிப்ரவரி மாதத்தில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 143 கோடி ரூபாய் மொத்த சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வசூல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய வருவாய்த்துறை தெரிவித்துள்ளது.
- தொடர்ந்து 5-வது மாதமாக ஜிஎஸ்டி வசூல் ரூ.1 லட்சம் கோடிக்கும் அதிகமாக வசூலாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெக்ட்ரம் ஏலம் - ரிலையன்ஸ் முதலிடம்

- 2 நாட்கள் நடைபெற்ற ஏலத்தில் 77 ஆயிரத்து 815 கோடி ரூபாய்க்கு அலைக்கற்றை விற்பனை செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.




- தொலை தொடர்புத்துறை நடத்திய அலைக்கற்றை ஏலத்தில் பாரதி ஏர்டெல், வோடபோன் ஐடியா மற்றும் ரிலையன்ஸ் ஜியோ ஆகிய மூன்று நிறுவனங்கள் பங்கேற்றன.
- அதில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் 57 ஆயிரத்து 122 கோடி ரூபாய் மதிப்பிலான 488 புள்ளி 35 மெகா ஹெர்ட்ஸ் அலைக்கற்றைகளை ஏலம் எடுத்துள்ளது. அதேபோல் ஏர்டெல் நிறுவனம் 18 ஆயிரத்து 698 கோடி மதிப்புள்ள 355 புள்ளி 45 மெகா ஹெர்ட்ஸ் ரேடியோ அலைகளையும், வோடபோன் ஐடியா நிறுவனம் ஆயிரத்து 993 கோடி ரூபாய் மதிப்புள்ள 11 புள்ளி 80 மெகா ஹெர்ட்ஸ் ஸ்பெக்ட்ரத்தையும் வாங்கியுள்ளதாக மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.




**Top buyers**

A total of 2,308.80 MHz of spectrum worth about ₹3.92 lakh crore was put up for auction, and bids worth ₹77,814.80 crore were received for 855.60 MHz

| Bidder | Total quantity (MHz) | Total amount (₹ crore) |
|---|---|---|
| Reliance Jio Infocomm | 488.35 | 57,122.65 |
| Bharti Airtel | 355.45 | 18,698.75 |
| Vodafone Idea | 11.80 | 1,993.40 |

- 2 நாட்கள் நடைபெற்ற ஏலத்தில் மொத்தம், 77 ஆயிரத்து 814 கோடி ரூபாய் மதிப்புள்ள 855 புள்ளி 60 மெகா ஹெர்ட்ஸ் ஸ்பெக்ட்ரம் ஏலமிடப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## மாம்பழம் உற்பத்தி 4% அதிகரிக்கும்




- **'பழங்களின் அரசன்'** என்று வருணிக்கப்படும் மாம்பழம் உற்பத்தி நடப்பு 2020-21 பயிர் பருவத்தில் 2.11 கோடி டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது, 2019-20-ஆம் ஆண்டு உற்பத்தியான 2.02 கோடி டன்னுடன் ஒப்பிடுகையில் 4.24 சதவீதம் அதிகமாகும்.
- முலாம்பழம் விளைச்சல் நடப்பாண்டில் 13.60 லட்சம் டன்னிலிருந்து 13 லட்சம் டன்னாகவும், தர்பூசணி உற்பத்தி 31.5 லட்சம் டன்னிலிருந்து 31.20 லட்சம் டன்னாகவும் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.
- வாழைப்பழ உற்பத்தி 2020-21 பயிர் பருவத்தில் 3.26 கோடி டன்னிலிருந்து 3.37 கோடி டன்னாக இருக்கும். நாட்டில் ஒட்டுமொத்த பழவகைகளின் உற்பத்தி நடப்பாண்டில் 10.2 கோடி டன்னிலிருந்து 10.32 கோடி டன்னாக அதிகரிக்கும் என வேளாண் அமைச்சகம் புள்ளிவிவர மதிப்பீட்டில் தெரிவித்துள்ளது.

## 2000 ரூபாய் நோட்டுகள் புழக்கம் & அச்சிடுதல் – மத்திய அரசு புதிய தகவல்!!

| Dimensions | Main colour | Description | | | Date of Issue | Circulation |
|---|---|---|---|---|---|---|
| | | Obverse | Reverse | Watermark | | |
| 166 × 66 mm | Magenta | Mahatma Gandhi | Mangalyaan | Mahatma Gandhi | 2016 | Wide |

- 2000 ரூபாய் நோட்டுகள் கடந்த 2 வருடங்களாக அச்சிடப்படவில்லை என மத்திய நிதித்துறை அமைச்சர் மக்களவையில் எழுத்துப் பூர்வமாக விளக்கம் அளித்துள்ளார். ரூ.2000 நோட்டுகள் செல்லாது என சில மாதங்களுக்கு முன்னர் வதந்திகள் தீவிரமாக பரவி வந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

**மத்திய அரசு தகவல்:**

- இந்தியாவில் கடந்த 2016ம் ஆண்டு மத்திய அரசு சார்பில் ரூ.500 மற்றும் ரூ.1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்டது. இந்த பணமதிப்பிழப்பு கொள்கையால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதன் பின்னர் புது ரூ.2000, ரூ.500, ரூ.200 நோட்டுகள் படிப்படியாக வெளியிடப்பட்டன. 2000 ரூபாய் நோட்டுகள் கருப்புப்பண பதுக்கலுக்கு அதிகளவில் வழிவகுப்பதாகவும், இதனால் இது விரைவில் தடை செய்யப்பட உள்ளதாகவும் சமூக வலைதளங்களில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வதந்திகள் வேகமாக பரவின.
- ஆனால் இதற்கு மத்திய அரசு மறுப்பு தெரிவித்தது. இந்நிலையில் நாடாளுமன்ற மக்களவையில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் அனுராக் தாக்கூர் அவர்களிடம் இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அவர் எழுத்துப் பூர்வமாக பதில் அளித்துள்ளார். அவர் கூறுகையில், ரூ.2000 மதிப்புள்ள 3,362 லட்சம் தாள்கள் 2018 மார்ச் 30 அன்று புழக்கத்தில் இருந்தன.

## இந்த மாதத்தின் முதல் 12 நாள்களில் நாட்டின் மின்சாரப் பயன்பாடு 16.5 சதவீதம் அதிகரித்துள்ளது

- நடப்பு மாதத்தின் முதல் 12 நாள்களில் நாட்டின் மின்சாரப் பயன்பாடு 4,767 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டின் அதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் 16.5 சதவீத வளர்ச்சியாகும்.
- கடந்த ஆண்டு மார்ச் மாதம் 1 முதல் 12 வரையிலான தேதிகளில் மின்சாரப் பயன்பாடு 4,092 கோடி யூனிட்களாக பதிவு செய்யப்பட்டது என்று அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

## நான்கு விமான நிலையங்களின் பங்குகளை விற்க மத்திய அரசு முடிவு

- நாட்டில் ஏற்கெனவே தனியார்மயமாக்கப்பட்ட **தில்லி, மும்பை, பெங்களூரு, ஹைதராபாத்** விமான நிலையங்களின் மீதமுள்ள அரசு பங்குகளையும் விற்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ரூ. 2.5 லட்சம் கோடி அளவுக்கு அரசு சொத்துகளில் இருந்து நிதி திரட்டுவதற்கு அரசு இலக்கு நிர்ணயத்துள்ளதின் ஒரு பகுதியாக கூடுதல் ஆதாரங்களாக இவைக் கண்டறியப்பட்டுள்ளதாக துறை வட்டாரங்கள் தெரிவித்தன.
- 2021 - 2022 நிதி ஆண்டில் 13 விமான நிலையங்கள் தனியார் மயமாக்கலுக்கு அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் இந்த நான்கு விமான நிலையங்களின் தனது பங்குகளை இந்திய விமான நிலைய ஒழுங்காற்று ஆணையம் விற்கவுள்ளது. கடந்த மாதம் இத்துறையின் அரசு செயலர்களுக்கான அதிகாரக் குழு நடத்திய கலந்துரையாடலில் பங்கேற்ற இரு அதிகாரிகள் இத்தகவலைத் தெரிவித்தனர்.

## சந்தை மதிப்பில் உலகின் முதல் 10 நாடுகளில் இந்தியா

- 2021 - 22 நிதி ஆண்டில் சந்தை மதிப்பில் உலகின் முதல் 10 நாடுகளில், இந்தியப் பங்குகளின் மதிப்பு கூடியுள்ளது.
- இது கோவிட் காரணமாக உருவான பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்படாத மீட்சியினைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்தத் தரவுகள் ப்ளூம்பெர்க்கினால் வழங்கப்பட்டுள்ளன.
- இத்தரவுகள் நடப்பு நிதிநிலையில் இந்தியாவினுடைய ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனம் டாலர் மதிப்பில் 88% என்ற அளவினை அடைந்துள்ளதை குறிப்பிட்டுக் காட்டுகின்றன.
- இது 2011 ஆம் நிதி ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனத்தில் ஏற்பட்ட வலுவான உயர்வாகக் கருதப்படுகிறது.




## இந்தியாவில் 4 கோடி பழைய வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன

- **ஆந்திரம், மத்திய பிரதேசம், தெலங்கானா, லட்சத் தீவு** தவிர்த்து இத்தகைய வாகனங்களின் தரவுகளை நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் டிஜிட்டல்மயமாக்கியுள்ளது.
- ஆந்திரம், மத்திய பிரதேசம், தெலங்கானா, லட்சத் தீவு தவிர்த்து இத்தகைய வாகனங்களின் தரவுகளை நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் டிஜிட்டல்மயமாக்கியுள்ளது.
- பழைய வாகனங்களை அதிகம் பயன்படுத்தும் மாநிலங்களின் பட்டியலில் **கர்நாடகம்** 70 லட்சத்துடன் **முதலிடத்தில்** உள்ளது. இதையடுத்து, 56.54 லட்சம் வாகனங்களுடன் **உத்தர பிரதேசம் இரண்டாவது** இடத்தில் உள்ளன. உ.பி.யில் 20 ஆண்டுகளுக்கும் மேல் பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கையானது 35.11 லட்சமாகும்.
- இவற்றைத் தொடர்ந்து கேரளத்தில் 34.64 லட்சம் பழைய வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த எண்ணிக்கை தமிழகத்தில் 33.43 லட்சமாகவும், பஞ்சாபில் 25.38 லட்சமாகவும், மேற்கு வங்கத்தில் 22.69 லட்சமாகவும் உள்ளன.
- மகாராஷ்டிரம், ஒடிஸா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் ஹரியாணா மாநிலங்களில் பழைய வாகனங்களின் எண்ணிக்கை 17.58 லட்சம் மற்றும் 12.29 லட்சம் என்ற அளவில் உள்ளன.
- ஜார்க்கண்ட், உத்தரகண்ட், சத்தீஸ்கர், ஹிமாசல பிரதேசம், புதுச்சேரி, அஸ்ஸாம், பிகார், கோவா, திரிபுரா, தாத்ரா - நாகர்ஹவேலி மற்றும் டாமன் - டையூவில் பழைய வாகனங்களின் பயன்பாடு 1 லட்சம் மற்றும் 5.44 லட்சமாக உள்ளது. இதர மாநிலங்களில் இந்த எண்ணிக்கை 1 லட்சத்துக்கும் கீழ் உள்ளதாக அந்த தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விசா நிறுவனம் கிரிப்டோகரன்சி பேமெண்ட் ஏற்க முடிவு**

- விசா வெளியிட்டுள்ள அறிவிப்பில் USD காயின் கிரிப்டோகரன்சி வாயிலான பேமெண்ட்களை இனி தனது நெட்வொர்க்கில் ஏற்க உள்ளதாக அறிவித்துள்ளது. விசா போன்ற உலகளவிலான நிதியியல் நிறுவனம் கிரிப்டோ பேமெண்ட் தளத்திற்குள் வரும் நிலையில் கிரிப்டோ மூலம் செய்யப்படும் வர்த்தகம் அதிகரிக்கும்.
- USD காயின் என்பது ஒரு நிலையான கிரிப்டோகரன்சி, இதன் மதிப்பு நேரடியாக அமெரிக்க டாலரில் தான் மதிப்பிடப்படும். கிரிப்டோ பேண்ட்மெண்ட் - காக விசா நிறுவனம் கிரிப்டோ.காம் என்ற தளத்தை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் தற்போது USD காயின் பேமெண்ட் - ஐ ஏற்க முடிவு செய்துள்ளது.

**2019 - ஐ காட்டிலும் 2021 - இல் பொருளாதார வளர்ச்சி குறைவாகவே இருக்கும்: ஐ.நா.**

- கடந்த 2019 - ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு 2021 - ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறைவாகவே இருக்கும் என ஐ.நா.வின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளுக்கான ஐ.நா.வின் பொருளாதாரம் மற்றும் சமூக ஆணையம் **(United Nations Economic and Social Commission for Asia and the Pacific (UNESCAP))** வெளியிட்ட அறிக்கையில் கரோனா பெருந்தொற்று பேரிடரால் வழக்கமான வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளானதன் காரணமாக 2020 - 21 - இல் இந்தியப் பொருளாதாரம் 7.7 சதவீதம் சரிவடையும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், 2021 - 22 - ஆம் நிதியாண்டில் பொருளாதாரம் 7 சதவீத வளர்ச்சியை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ARUL IAS ACADEMY

## திட எரிபொருள் குழாய் ராம்ஜெட் தொழில்நுட்பம் (SFDR)



- திட எரிபொருள் குழாய் ராம்ஜெட் தொழில்நுட்பத்தை (Solid Fuel Ducted Ramjet technology - SFDR) அடிப்படையாகக் கொண்ட விமானச் சோதனையைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO) வெற்றிகரமாக சோதித்துள்ளது.
- இது ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் சோதிக்கப்படுகின்றது.
- SFDR தொழில்நுட்பமானது DRDO அமைப்பிற்கு தொழில்நுட்ப நன்மையுடன் சேர்த்து நீண்ட தூர வரம்பு கொண்ட வானிலிருந்து வானில் உள்ள ஏவுகணைகளை உருவாக்க உதவும்.

**ராம்ஜெட்**

- ராம்ஜெட் என்பது காற்றினால் இயங்கும் ஜெட் இயந்திரத்தின் ஒரு வடிவமாகும். இது சுழலும் ஒரு அமுக்கி இல்லாமல் எரிப்புக்காக உள்வரும் காற்றை அமுக்க வாகனத்தின் முன்னோக்கு இயக்கத்தைப் பயன்படுத்துகின்றது.
- ராம்ஜெட்டுகள் மீ ஒலி வேக வேகத்தில் மிகவும் திறனுள்ள வகையில் செயல்படுகின்றன. ஆனால் அவை மீ மிகை ஒலி வேகத்தில் திறனுள்ள வகையில் இல்லை.

## கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 33 சதவீதம் குறைந்துள்ளது

- 2011 - 15 மற்றும் 2016 - 20 க்கு இடையில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 33 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (சிப்ரி) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெர்விட்ய்ஹ்து உள்ளது.
- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வில், உலகிலேயே அதிக ஆயுதங்கள் இறக்குமதி செய்வதில் சவுதி அரேபியா தொடர்ந்து முதலிடத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.
- 2ம் இடத்தில் உள்ள இந்தியா 2016 முதல் 2020 வரை அமெரிக்காவைத் தொடர்ந்து ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாபெரும் விண்வெளி தொலைநோக்கி – ரஷ்யா




- தெற்கு சைபீரியாவில் உள்ள பைக்கால் ஏரியில் ஒரு மாபெரும் தொலைநோக்கியினை ரஷ்யா அமைத்துள்ளது.
- இது பேரண்டத்தில் உள்ள புலப்படும் நுண் பொருட்களை (துகள்களை) கண்டறிவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- பைக்கால் – கைகடோன் வால்யூம் டிடக்டர் எனும் தொலைநோக்கி (Baika – Gigaton Volume Detector) நியூட்ரினோக்களைக் கண்டறிவதற்காக வடிவமைக்கப்பட்டது ஆகும்.
- நியூட்ரினோக்கள், கிட்டத்தட்ட நிறையற்ற, மின்னூட்டமற்ற துணைநிலை அணுத் துகள்கள் ஆகும்.
- பைக்கால் ஏரியானது புவியில் உள்ள ஆழமான மற்றும் மிகப்பெரிய நன்னீர் ஏரி ஆகும்.

## கருந்துளைகளின் ஒருங்கிணைந்த அழைப்பைக் கண்டறிதல்

- செப்டம்பர் 14, 2014 தேதியிட்ட கருந்துளைகளை இணைப்பதை முதன்முதலில் கண்டறிந்ததிலிருந்து, யு.எஸ்.இல் LIGOவில் உள்ள இரண்டு ஈர்ப்பு அலை கண்டுபிடிப்பாளர்களால், புலம் முக்கியமான முன்னேற்றங்களைக் கண்டது.
- இத்தாலியில் உள்ள விர்கோ டிடெக்டர் மற்றும் ஜப்பானில் உள்ள கக்ரா டிடெக்டர் ஆகியவற்றால் பல்வேறு மூலங்களிலிருந்து ஈர்ப்பு அலைகளைத் தேடுவதில் LIGO டிடெக்டர்கள் இணைந்துள்ளன.

## 'மருத்துவத்தை ஒரே நேரத்தில் பட்டியலுக்குள் கொண்டுவர வேண்டும்'




- மருத்துவம் அரசியலமைப்பின் கீழ் ஒரே நேரத்தில் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும், என பதினைந்தாவது நிதி ஆணையத்தின் தலைவர் என்.கே. சிங் கூறியுள்ளார்.
- இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான அதிகாரங்களைப் பிரிப்பதைப் பற்றியது.
- இது யூனியன் மற்றும் மாநிலங்களுக்கு இடையில் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை ஒதுக்கீடு செய்வதை வரையறுக்கிறது மற்றும் குறிப்பிடுகிறது. இது மூன்று பட்டியல்களைக் கொண்டுள்ளது; அதாவது 1) யூனியன் பட்டியல், 2) மாநில பட்டியல் மற்றும் 3) ஒருங்கியல் அதிகாரப் பட்டியல்.

**ஒருங்கியல் அதிகாரப் பட்டியல்**


- இந்த பட்டியலில் தற்போது 52 (முதலில் 47) பட்டியல்கள் உள்ளன.
- யூனியன் மற்றும் அந்தந்த மாநிலங்களின் கூட்டுக் களத்தின் கீழ் உள்ள பட்டியல்கள் இதில் அடங்கும்.

## இந்தியா – பிரான்சு கூட்டு விண்வெளித் திட்டம்



- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிரான்சின் விண்வெளி நிறுவனமான CNES (National Centre for Space Studies) ஆகியவை இணைந்து மூன்றாவது கூட்டு விண்வெளித் திட்டத்தில் பணியாற்றி வருகின்றன.
- இஸ்ரோ மற்றும் CNES ஆகிய நிறுவனங்கள் TRISHNA எனப்படும் வெப்ப அகச்சிவப்பு புகைப்பட உபகரணத்தைக் கொண்டு புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒரு சாத்தியக்கூறு ஆய்வினை முடித்துள்ளன.
- **TRISHNA (Thermal infraRed Imaging Satellite for High resolution Natural resource Assessment)** ஆனது நீர்சுழற்சி முறையைக் கண்காணித்து அதனை சிறப்பாகப் பயன்படுத்த உதவும்.
- CNES நிறுவனத்தின் AGROS ஆனது இஸ்ரோவின் OCEANSAT-3 செயற்கைக்கோளுடன் ஒன்றிணைக்கப்படும்.
- ARGOS என்பது உலகளாவிய செயற்கைக்கோள் சார்ந்த தரவு சேகரிப்பு மற்றும் இடங்காட்டி அமைப்பு ஆகும்.
- இது சுற்றுச்சூழலைப் பற்றி அறிவதற்கும் அதனைப் பாதுகாப்பதற்கும் வேண்டி அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.

## குறுங்கோள் 2001 FO32




- குறுங்கோள் 2001 FO32 என்பது 2021 ஆம் ஆண்டில் புவியைக் கடந்து சென்ற மிகப்பெரிய குறுங்கோள் ஆகும்.
- இது 20 வருடங்களுக்கு முன்பு 2001 ஆம் ஆண்டில் நியூ மெக்சிகோவில் உள்ள சாக்காரோ என்னுமிடத்திலுள்ள LINEAR மையத்தினால் (LINEAR - Lincoln Near Earth Asteroid Research) கண்டுபிடிக்கப்பட்டது.
- புவிக்கு அருகில் உள்ள போது இக்குறுங்கோள் 2 மில்லியன் கி.மீ. தொலைவில் (புவிக்கும் நிலவிற்கும் இடையிலான தொலைவில் 5 ¼ மடங்கு) இருக்கும்.
- எனவே இது "தீங்கு விளைவிக்கக் கூடிய குறுங்கோள்" என கூறப்பட்டுள்ளது.

| 7. தேசிய செய்திகள் | மார்ச் 2021 இல் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்வுகள் |
|---|---|

## 2 ஆண்டுகளில் 1 கோடி இலவச எரிவாயு இணைப்பு: பெட்ரோலிய துறை செயலர் தகவல்

- அடுத்த 2 ஆண்டுகளில் 1 கோடிக்கும் அதிகமான இலவச சமையல் எரிவாயு இணைப்புகளை (எல்பிஜி) வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக பெட்ரோலியத் துறை செயலர் தருண் கபூர் தெரிவித்துள்ளார்.
- இந்த ஒரு கோடி இணைப்புகளையும் சேர்க்கும்போது நாட்டில் எல்பிஜி பரவலாக்கம் 100 சதவீதத்தை நெருங்கிவிடும்.
- இதற்காக, 2021 - 22 - ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. ஒரு இணைப்புக்கு ரூ.1,600 செலாவகும் நிலையில் அதனை ஈடு செய்வதற்கு பொது எரிபொருள் மானிய ஒதுக்கீடே போதுமானதாக இருக்கும் என்றார் அவர்.

## கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியை இந்தியா, ஜப்பானுக்கு வழங்க இலங்கை சம்மதம்





- கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கன்டெய்னர் முனையம் அமைக்கும் ஒப்பந்தத்தை மீண்டும் இந்தியா, ஜப்பானுக்கு வழங்க இலங்கை அரசு முடிவெடுத்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கன்டெய்னர் முனையம் அமைக்க இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இலங்கை அரசு கடந்த 2019 - ம் ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

**கொழும்பு துறைமுகத்தில் முனையம் கொண்ட இந்தியாவின் முக்கியத்துவம்**

- இந்த துறைமுகத்தில் மூன்றில் இரண்டு பங்கு டிரான்ஸ்-ஷிப்பிங் இந்தியாவுடன் பிணைக்கப்பட்டுள்ளது, இது ஒரு முக்கியமான வர்த்தக மற்றும் இணைப்பு இணைப்பாக அமைகிறது.
- இந்தியா மற்றும் ஜப்பான் முதலீடு செய்வதற்கான ஒரு கூட்டு முயற்சியாக, ECT திட்டம் இரண்டு இந்தோ-பசிபிக் கூட்டாளர்களும், குவாட் உறுப்பினர்களும் எவ்வாறு தெற்காசியாவிற்கு நிதி மற்றும் மேம்பாட்டுக்கு சாத்தியமான, வெளிப்படையான மற்றும் நிலையான மாற்றுகளை வழங்க முடியும் என்பதைக் காண்பிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

## தேசிய மக்கள் தொகை பதிவு




- **"சுகம்யா பாரத் செயலி"** மற்றும் **"புகைப்படத் தொகுப்பினை அணுகுதல்"**
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தாவர் சந்த் கெலாட் அவர்கள் "சுகம்யா பாரத் செயலி" மற்றும் "புகைப்படத் தொகுப்பினை அணுகுதல்" என்ற ஒரு கையேடு இரண்டையும் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தச் செயலி மற்றும் கையேடு இரண்டும் மாற்றுத் திறனாளிகளின் அதிகாரமளிப்புத் துறையினால் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- இது மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் ஆகியோருக்கான அணுகல் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பதிவு செய்ய வழிவகை செய்கின்றது.
- இந்தக் கைபேசிச் செயலியானது மாற்றுத் திறனாளிகளால் எதிர்கொள்ளப்படும் கொரானா வைரஸ் தொடர்பான பிரச்சினைகளையும் களைய இருக்கின்றது.
- இந்தக் கையேடானது பல்வேறு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களிலிருந்து எடுக்கப் பட்ட புகைப்படங்களின் ஒரு தொகுப்பாகும்.
- இது படங்கள் வடிவில் நல்ல மற்றும் தீய நடைமுறைகள் குறித்து எளிதில் புரிந்து கொள்ளவும் அணுகல் தொடர்பான 10 அடிப்படை அம்சங்கள் குறித்து மாற்றுத் திறனாளிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட பங்குதாரர்களுக்கான கூறு மற்றும் வழிகாட்டியாகவும் செயல்படுகின்றது.
- இந்த செயலியானது முக்கியமான 5 அம்சங்களை அளிக்கின்றது. இதில் 4 அம்சங்கள் அணுகலை மேம்படுத்துவது தொடர்பானவையாகும். இதில் 5வது ஆக உள்ளது கொரானா வைரஸ் தொடர்பான பிரச்சினைகளுக்கான மாற்றுத் திறனாளிகளுக்காக மட்டுமே உள்ள ஒரு சிறப்பு அம்சமாகும்.


**பிரான்சுடன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் - மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- பிரான்ஸ் நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சூரிய சக்தி, காற்று, ஹைட்ரஜன் மற்றும் உயிரி ஆற்றல் தொடர்பான தொழில்நுட்பங்கள் இடம்பெற்றுள்ளன.
- இதேபோல் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவதற்காக, இந்தியாவிற்கும் பிஜிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது, 5 வருட காலத்திற்கு நடைமுறையில் இருக்கும்.

**தண்டி யாத்திரை**

- தேசிய உப்பு சத்தியாகிரக நினைவு அல்லது தண்டி நினைவு.
- சால்டி மார்ச், தண்டி மார்ச், மற்றும் தண்டி சத்தியாக்கிரகம் என்றும் அழைக்கப்படும் தண்டி மார்ச், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தலைமையிலான வன்முறையற்ற சட்ட ஒத்துழையாமைக்கான செயலாகும்.
- இந்த அணிவகுப்பு மார்ச் 12, 1930 முதல் ஏப்ரல் 6, 1930 வரை நீடித்தது, வரி எதிர்ப்பு மற்றும் பிரிட்டிஷ் உப்பு ஏகபோகத்திற்கு எதிரான வன்முறையற்ற போராட்டத்தின் நேரடி நடவடிக்கை.

**உலக அளவில் சிறந்த கல்வி நிலையங்கள் 3 இடத்தை பிடித்த இந்தியா.!!!**


**Top universities**

Four Indian institutions feature in the top 100 list of QS World University Rankings under two subjects - Engineering and Technology and Natural Sciences

| Engineering and Technology | |
|---|---|
| Rank | University |
| 1 | MIT, U.S. |
| 2 | Stanford, U.S. |
| 3 | Cambridge, U.K. |
| 49 | IIT, Bombay |
| 54 | IIT, Delhi |
| 94 | IIT, Madras |

| Natural sciences | |
|---|---|
| Rank | University |
| 1 | MIT, U.S. |
| 2 | Stanford, U.S. |
| 3 | Harvard, U.S. |
| 92 | IISc, Bangalore |




- 12 இந்திய நிறுவனங்கள் 2021 ஆம் ஆண்டிற்கான QS தரவரிசையில் முதல் 100 இடங்களைப் பெற்றுள்ளன.

**குவாக்கரெல்லி சைமண்ட்ஸ்(QS)**

- இதில் IIT பம்பாய், ஐ.ஐ.டி டெல்லி, IIT மெட்ராஸ், IIT கரக்பூரில் IISc பெங்களூர், IIM அகமதாபாத், ஜே.என்.யூ அண்ணா பல்கலைக்கழகம் டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் ஓ.பி. ஜிண்டால் பல்கலைக்கழகம் ஆகியவை இந்தியாவின் 12 நிறுவனங்களில் அடங்கியுள்ளது என்று தெரிவித்தனர்.

## கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கப் போவதில்லை

OPEC share of world crude oil reserves, 2018




OPEC proven crude oil reserves, at end 2018 (billion barrels, OPEC share)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Venezuela | 302.81 | 25.5% | Kuwait | 101.50 | 8.5% | Algeria | 12.20 | 1.0% | Gabon | 2.00 | 0.2% |
| Saudi Arabia | 267.03 | 22.4% | UAE | 97.80 | 8.2% | Ecuador | 8.27 | 0.7% | Equatorial Guinea | 1.10 | 0.1% |
| IR Iran | 155.60 | 13.1% | Libya | 48.36 | 4.1% | Angola | 8.16 | 0.7% | | | |
| Iraq | 145.02 | 12.2% | Nigeria | 36.97 | 3.1% | Congo | 2.98 | 0.3% | | | |

*Source: OPEC Annual Statistical Bulletin 2019.*

- கச்சா எண்ணெய் உற்பத்தியை ஏப்ரல் மாதம் வரை அதிகரிக்க வேண்டாமென்று பெட்ரோலியப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (OPEC+) முடிவெடுத்துள்ளது.
- கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்குமாறு இந்தியா தொடர்ந்து கோரி வந்த நிலையில், அக்கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளது.
- உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் இறக்குமதியாளர் இந்தியா. இந்தியா தனது எண்ணெயில் **சுமார் 84% இறக்குமதி** செய்கிறது
- OPEC+ என்பது கச்சா உற்பத்தியாளர்களின் கூட்டணியைக் குறிக்கிறது, அவர்கள் 2017 முதல் எண்ணெய் சந்தைகளில் விநியோகத்தில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

## அம்ரித் மகா உற்சவம்

- "அம்ரித் மகா உற்சவமானது" இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டு காலம் ஆனதை அனுசரிப்பதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
- இது நாடு முழுவதும் 75 இடங்களில் 75 வாரங்களுக்குக் கொண்டாடப்பட இருக்கின்றது.
- இந்த சிறப்புமிகு திருவிழாவானது மார்ச் 12 ஆம் தேதி முதல் குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடங்கப்பட இருக்கின்றது.

## காவல் நிலையங்களில் மகளிர் உதவி மையம் அமைக்க மாநிலங்களுக்கு ரூ.200 கோடி மத்திய உள்துறை அமைச்சகம்

- காவல் நிலையங்களில் மகளிர் உதவி மையங்கள் அமைப்பதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ரூ. 200 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

## வளர்ச்சி மிகு நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 5-ஆம் இடம்

| நிலை | நாடு |
|---|---|
| 5 | இந்தியா |
| 1 | அமெரிக்கா |
| 2 | சீனா |
| 3 | ஜெர்மனி |
| 4 | இங்கிலாந்து |

- அனைவரையும் கவரும் விதத்திலான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 5-ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக பிரைஸ் வாட்டர்கூப்பர்ஸ் (பி.டபிள்யூ.சி.) நிறுவனத்தின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அடுத்த 12 மாதங்களில் மிகச்சிறந்த வளர்ச்சியை தக்கவைக்கும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து சீனா இரண்டாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.
- இப்பட்டியலில் 17 சதவீத பங்களிப்புடன் ஜெர்மனி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- அதேசமயம், பிரெக்ஸிட் ஒப்பந்தத்துக்குப் பிறகு பிரிட்டன் இப்பட்டியலில் நான்காவது இடத்துக்கு (11 சதவீதம்) முன்னேறியுள்ளது. இதன்மூலம், அந்த நாடு இந்தியாவை (8 சதவீதம்/5-ஆவது இடம்) விஞ்சியுள்ளது.
- இதேபட்டியலில், ஆஸ்திரேலியாவை பின்னுக்குத் தள்ளி ஜப்பானும் ஆறாவது இடத்தை பிடித்துள்ளதாக பி.டபிள்யூ.சி. ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் 17 மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டது One Nation One Ration Card!




- 17 மாநிலங்கள் 'ஒன் நேஷன் ஒன் ரேஷன் கார்டு' (One Nation One Ration Card) முறையை அமல்படுத்தியுள்ளதாக நிதி அமைச்சகம் (Ministry of Finance) தெரிவித்துள்ளது. இந்த திட்டத்தில் சேரும் மாநிலங்களில் உத்தரகண்ட் என்பது சமீபத்திய பெயர்.

- அனுமதிக்கப்பட்ட கூடுதல் கடன் (கோடியில்) திட்டத்தை செயல்படுத்திய மாநிலங்களின் பட்டியல்:

| மாநிலம் | கோடிகளில் |
|---|---|
| ஆந்திரா | ₹2,525 |
| கோவா | ₹223 |
| குஜராத் | ₹4,352 |
| ஹரியானா | ₹2,146 |
| இமாச்சல பிரதேசம் | ₹438 |
| கர்நாடகா | ₹4,509 |
| கேரளா | ₹2,261 |
| மத்தியப் பிரதேசம் | ₹2,373 |
| மணிப்பூர் | ₹75 |
| ஒடிசா | ₹1,429 |
| பஞ்சாப் | ₹1,516 |
| ராஜஸ்தான் | ₹2,731 |
| தமிழ்நாடு | ₹4,813 |
| தெலுங்கானா | ₹2,508 |
| திரிபுரா | ₹148 |
| உத்தரகண்ட் | ₹702 |
| உத்தரபிரதேசம் | ₹4,851 |

## கடந்த ஆண்டு அளவை விஞ்சிய ரயில் சரக்கு போக்குவரத்து: ரயில்வே வாரிய தலைவர்

- சரக்கு ரயில்களில் கடந்த நிதியாண்டில் 1145.61 மெட்ரிக் டன் அளவில் சரக்குகள் ஏற்றப்பட்ட நிலையில், மார்ச் 12 - ஆம் தேதி வரையிலான 2020 - 21 நிதியாண்டில் 1145.68 மெட்ரிக் டன் சரக்குகள் ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.
- மாத அடிப்படையில் கணக்கிடும்போது மார்ச் 11 - ஆம் தேதி வரையிலான நிகழ் நிதியாண்டில் 4.34 கோடி டன் சரக்குகள் ரயில்களில் ஏற்றப்பட்டிருக்கிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் கூடுதலாகும். கடந்த நிதியாண்டில் 3.93 கோடி டன் சரக்குகள் ரயில்களில் ஏற்றப்பட்டன.
- அதுபோல, 2021 மாரச் மாதத்தில் சரக்கு ரயில்களின் சராசரி வேகம் மணிக்கு 45.49 கி.மீ. என்ற அளவுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதல் வேகமாகும். கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் சரக்கு ரயில் சராசரி வேகம் மணிக்கு 23.29 கிலோ மீட்டாராக இருந்தது.

## 2024 க்குள் மக்கள் தொகை கணக்கெடுப்பு

- 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்னர் சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவுக்கான (என்.பி.ஆர்) தற்காலிக தகவல்கள் கிடைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் ஒரு நாடாளுமன்றக் குழுவுக்கு அளித்த தகவல்களின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. 2021 - 22 நிதியாண்டிற்கான முக்கிய உந்துதல் பகுதிகளில் NPR இன் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புதுப்பிப்பு இருக்கும் என்று அமைச்சு குழுவுக்கு அறிவித்தது. முந்தைய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 இல் நடத்தப்பட்டது மற்றும் 119 கோடி குடியிருப்பாளர்களின் தரவுத்தளத்தைக் கொண்ட NPR கடைசியாக 2015 இல் புதுப்பிக்கப்பட்டது.
- இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவது மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம், 1948 ஆல் வழிநடத்தப்படுகிறது.
- சுதந்திர இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1951 இல் நடத்தப்பட்டது, இது அதன் தொடர்ச்சியான தொடரின் ஏழாவது கணக்கெடுப்பாகும்.

## நாட்டின் பல்வேறு பகுதிகளில் 157 மருத்துவக் கல்லூரிகள்: மத்திய அமைச்சர் ஹர்ஷ் வர்தன்

- கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 157 மருத்துவக் கல்லூரிகளை அமைக்கும் பணிகள் வெவ்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இதில் 58 கல்லூரிகள் முதல் கட்டத்திலும், 24 கல்லூரிகள் 2-ஆம் கட்டத்திலும், 75 கல்லூரிகள் 3-ஆம் கட்டத்திலும் உள்ளன.
- பிரதமர் மோடியின் ஆட்சியில் இதுவரை 22 எய்ம்ஸ் மருத்துவமனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 16 மருத்துவமனைகளை அமைக்கும் பணிகள் கடந்த 7 ஆண்டுகளாக பல்வேறு கட்டங்களில் உள்ளன.
- மத்தியில் பிரதமர் மோடி தலைமையில் இரண்டாவது முறையாக ஆட்சி அமைந்த பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் 75 மருத்துவக் கல்லூரிகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா – மாலத்தீவுகள் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தியா-பின்லாந்து மெய்நிகர் உச்சி மாநாடு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பின்லாந்து குடியரசின் பிரதமர் செல்வி சன்னா மரின் பங்கேற்புடன் நடைபெற்றது.
- இருதரப்பு பிரச்சினைகள் மற்றும் பரஸ்பர ஆர்வத்தின் பிற பிராந்திய மற்றும் பலதரப்பு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மெய்நிகர் உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தியா மற்றும் மாலத்தீவுகள் ஆகியவற்றுக்கு இடையே விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறை ஆகியவற்றில் ஒத்துழைப்பிற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- விளையாட்டு அறிவியல், விளையாட்டு மருத்துவம், பயிற்சி நுட்பங்கள் ஆகியவற்றுடன் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்களில் இளம் வீரர்களின் பங்கேற்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய அனுபவம் மற்றும் அறிவு போன்றவற்றை விரிவுபடுத்த இது உதவும்.

## சாஹி திஷா பிரச்சாரம்

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்ட அமைப்பு "சாஹி திஷா" எனப்படும் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இப்பிரச்சாரம் இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் பெண்கள் தங்களது வாழ்வாதாரங்களைப் பெறுவதிலும் வேலை வாய்ப்புகளைப் பெறுவதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகள் மற்றும் தடைகள் பற்றி குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- திஷா திட்டம் என்பது IKEA பவுண்டேசன் என்ற ஒரு நிறுவனத்திற்கும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்ட அமைப்பிற்கும் இடையேயான ஒரு ஐந்தாண்டு கால கூட்டு முயற்சி ஆகும்.
- இது ஆலோசனைகள் மூலமாகவும் செயல்திறன் சேவைகள் மூலமாகவும் சுமார் 1 மில்லியன் பெண்களுக்குப் பலன்களை வழங்கியுள்ளது.
- இப்பிரச்சாரம் (திட்டம்) இந்தியாவின் ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பலன்களை வழங்கியுள்ளது. அவை
  - ஹரியானா
  - தில்லி (தேசிய தலைநகரப் பகுதி)
  - மஹாராஷ்டிரா
  - கர்நாடகா
  - தெலுங்கானா

## பழைய வாகனங்களை அழிப்பதற்கான கொள்கை




- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்கள் பழைய வாகனங்களை அழிப்பதற்கான கொள்கையினை 2021 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தினார்.
- இக்கொள்கை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் அமலுக்கு வரும்.
- இக்கொள்கையானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 2021 - 2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் போது அவர் ஆற்றிய உரையில் முதன்முதலாக அறிவிக்கப்பட்டது.

### குறிப்பு

- 20 வருடங்களுக்கும் மேலான பழைய 51 லட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இலகுரக மோட்டார் வாகனங்கள் இக்கொள்கையின் கீழ் அகற்றப்படும்.
- 34 லட்சம் இலகுரக மோட்டார் வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலானவை. மேலும் 51 லட்சம் இலகுரக மோட்டார் வாகனங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலானவை.
- 17 லட்சம் நடுத்தர மற்றும் கனரக வணிகத்திற்குப் பயன்படும் வாகனங்கள் 15 வருடங்களுக்கும் மேலானவை ஆகும்.

### சிறப்பம்சங்கள்

- இக்கொள்கை, வாகனங்கள் வெளியிடும் மாசுப் பொருட்களைக் குறைப்பதன் மூலம் ஆட்டோமொபைல் துறையில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும்.
- இக்கொள்கையானது தரம் குறைந்த, பழைய மற்றும் மாசுபடுத்தும் வாகனங்கள் இல்லாத ஒரு சூழலை உருவாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இக்கொள்கையின் கீழ், 20 வருடங்களுக்குப் பிறகு சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் ஆட்டோமொபைல் மையங்களில் தரநிர்ணய சோதனைக்கு உட்படுத்தப்படும்.
- 15 வருடங்களுக்குப் பிறகு வணிகத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தரநிர்ணயச் சோதனைக்கு உட்படுத்தப்படும்.
- ஒரு வாகனம் மூன்று முறை தரநிர்ணய சோதனையில் தகுதி பெறவில்லையெனில் அதன் உரிமையாளர் அந்த வாகனத்தை சாலையில் பயணிக்க உபயோகிக்கக்கூடாது.

## பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் திட்டங்களை செயல்படுத்த, 000 37,000 கோடி கடன் பெறுகிறது

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஐந்து வெவ்வேறு பன்னாட்டு வங்கிகளிடமிருந்து மொத்தம், 37,179 கோடி கடன்களைப் பெற திட்டமிட்டுள்ளது, இதில் குழந்தைகள் மேம்பாடு குறித்த ஆராய்ச்சி மையம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழிப்பதற்காக கல்பத்ருவின் கீழ் 200 மில்லியன் மரங்களை நடவு செய்தல் ஆகியவை அடங்கும்.
- 2022 நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் அமைச்சகம், 24,435 கோடியைப் பெற்றது.
- இது ஏற்கனவே போஷன் அபியான் அல்லது ஊட்டச்சத்து மிஷனை 2017 முதல் மூன்று ஆண்டுகளுக்கு, 9,000 கோடி செலவில் செயல்படுத்தி வருகிறது, அதில் பாதி உலக வங்கிக் கடன் மூலம் நிதியளிக்கப்படுகிறது.

## இந்தியாவில் ஹீலியம் பெறுவதில் வளர்ந்து வரும் நெருக்கடி

- ஹீலியம் என்பது அவர் மற்றும் அணு எண் 2 என்ற குறியீட்டைக் கொண்ட ஒரு வேதியியல் உறுப்பு ஆகும்.
- இந்தியாவின் ராஜ்மஹால் எரிமலை படுகை என்பது சூரியனில் இருந்து நமது பூமி பிறந்ததிலிருந்து பில்லியன் கணக்கான ஆண்டுகளாக சிக்கியிருக்கும் ஹீலியத்தின் களஞ்சியமாகும்.
- தற்போது, ஆராய்ச்சியாளர்கள் ராஜ்மஹால் படுகையை எதிர்கால ஆய்வு மற்றும் ஹீலியம் பயன்படுத்துவதற்காக விரிவாக வரைபடமாக்குகின்றனர்.

## சிஆர்பிஎஃபின் 82வது அமைப்பு தினம் – மத்திய ரிசர்வ்/சேமக் காவல் படை



- மத்திய ரிசர்வ் (சேமக்) காவல் படையானது இந்தியாவின் மிகப்பெரிய மத்திய ஆயுதமேந்திய காவல் படையாகும்.
- இது இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இது 1939 ஆம் ஆண்டு ஜூலை 27, அன்று மன்னரின் பிரதிநிதித்துவம் பெற்ற காவலர் படையாக நடைமுறைக்கு வந்தது.
- சுதந்திரத்திற்குப் பிறகு 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28, அன்று மத்திய ரிசர்வ் காவல்படை சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் இது மத்திய ரிசர்வ் காவல் படை என்று பெயர் மாற்றம் பெற்றது.
- 1950 ஆம் ஆண்டில் மார்ச் 19 ஆம் நாளன்று அப்போதைய உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் மத்திய ரிசர்வ் காவல் படைகளுக்கு குடியரசுத் தலைவரின் வண்ண அடிப்படையிலான விருதுகளை அறிமுகப்படுத்தினார்.
- 1986 ஆம் ஆண்டில் ஆசியாவிலேயே முதல் மகளிர் படைப்பிரிவினை மத்திய ரிசர்வ் காவல் படை உருவாக்கியது.
- இப்படை நக்சலிச தீவிரவாத இயக்கங்களுக்கு எதிரான போராட்டத்தில் பெரும்பங்கு வகிக்கிறது.
- மேலும் இது வைஷ்ணவோ தேவி, ராம ஜென்மபூமி மற்றும் அமர்நாத் போன்ற புனித தலங்களின் பாதுகாப்பிற்கும் சேர்த்து சிறப்பாக செயல்பட்டு இருக்கின்றது.

## காப்பீட்டுத் துறையில் 74% அந்நிய நேரடி முதலீடு: நாடாளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றம்




- காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 74 சதவீதமாக உயர்த்த வழிவகுக்கும் காப்பீட்டு சட்டத் திருத்த மசோதா (2021) மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஏற்கெனவே மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இந்த மசோதாவுக்கு ஒப்புதல் கிடைத்துவிட்டது.
- இதன் மூலம் காப்பீட்டுச் சட்டம் 1938 மீண்டும் திருத்தப்பட்டு காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீடு 49 சதவீதத்தில் இருந்து 74 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தபின் மசோதா சட்டவடிவு பெறும்.

## இந்திய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஜப்பான் ரூ.15,322 கோடி நிதி



- இரு நாடுகள் இடையிலான மானியம், கடன் தொடர்பான ஒப்பந்தத்தை இந்திய நிதியமைச்சகத்தின் பொருளாதாரத் துறை கூடுதல் செயலர் சி.எஸ்.மோகபாத்ராவும், ஜப்பான் தூதர் சுகோஷி சுசூகியும் பரிமாறிக் கொண்டனர். முதல்கட்டமாக ரூ.2.65 கோடி மானியம் அந்தமான் - நிகோபார் மின்சார திட்டங்களுக்கு வழங்கப்படும். பெங்களூரு மெட்ரோ 2 - ஆம் கட்டத் திட்டத்துக்கு ரூ.3,442 கோடியும், தில்லி மெட்ரோ நான்காவது கட்டத் திட்டத்துக்கு ரூ.7,932 கோடியும் கடன் அளிக்கப்படும். தில்லி மெட்ரோ ரயில் திட்டத்துக்காக 1997 முதல் இப்போது வரை சுமார் ரூ.47 கோடி வரை ஜப்பான் கடனுதவி அளித்துள்ளது.
- இது தவிர ஹிமாசல பிரதேசத்தில் பயிர் பகுப்பு முறை திட்டத்தின் இரண்டாவது கட்டத்துக்கு ரூ.737 கோடி கடனுதவி அளிக்கப்படும். இதன் மூலம் வேளாண் பொருள் உற்பத்தி அதிகரிக்கும். ராஜஸ்தானில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த ரூ. 3,032 கோடி கடனுதவி அளிக்கப்பட இருக்கிறது என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மாநிலங்களுக்கிடையேயான புலிகள் இடமாற்றத் திட்டம்



- 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியாவின் மாநிலங்களுக்கு இடையேயான முதலாவது புலிகள் இடமாற்றத் திட்டத்தின் ஒரு அங்கமாக மத்தியப் பிரதேசத்தில் இருந்து ஒடிசாவிற்கு இடமாற்றம் செய்யப் பட்ட சுந்தரி எனும் புலி சமீபத்தில் மீண்டும் மத்தியப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தது.
- 5 வயதான இந்தப் புலி ஒடிசாவிலுள்ள சத்கோசியா புலிகள் காப்பகத்தில் 28 மாதங்கள் அடைபட்டிருந்தது.

### புலிகள் இடமாற்ற திட்டம்

- இத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மத்தியப் பிரதேசத்தின் கான்ஹா புலிகள் காப்பகத்திலிருந்து ஒரு ஆண் (மகாவீர்) புலியும் பாந்தவ்கர் புலிகள் காப்பகத்திலிருந்து ஒரு பெண் (சுந்தரி) புலியும் ஒடிசாவிலுள்ள சத்கோசியா புலிகள் காப்பகத்திற்கு அம்மாநிலத்தின் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கொண்டு வரப்பட்டன.
- மகாவீர் வந்து சேர்ந்த அடுத்த ஒரு வாரத்தில் சுந்தரி சத்கோசியாவிற்கு கொண்டு வரப்பட்டது.
- இடமாற்றம் இரண்டு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.
  - அதிகப் புலிகள் எண்ணிக்கையுடைய பகுதிகளில் புலிகளுக்கிடையேயான முக்கிய எல்லைச் சிக்கல்களைக் குறைப்பதற்காக புலிகளின் எண்ணிக்கையை குறைத்தல்.
  - பல்வேறு காரணங்களால் புலிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ள பகுதிகளில் மீண்டும் புலிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

## காசநோய் அறிக்கை 2021 – இந்தியா

- இந்தியாவில் 18.05 லட்சம் காசநோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.
- மேலும் ஜனவரி 2020 மற்றும் பிப்ரவரி 2020 ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் காசநோய் பாதிப்புகள் ஆண்டுக்கு 6% அதிகரித்துள்ளதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் பதிவான 24.04 லட்சங்கள் பாதிப்பில் சிகிச்சைப் பலன் வீதம் 82% எனவும், இறப்பு வீதம் 4% எனவும் இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்த அறிக்கையின்படி, அடுத்தடுத்த நிலைகளில் 4% நோயாளிகளும் சிகிச்சைப் பலனளிக்காமை மற்றும் சிகிச்சை முறை மாற்றங்களினால் 3% நோயாளிகளும் இறந்துள்ளனர்.

### இந்தியாவில் காசநோய் பாதிப்பு

- உலகெங்கிலும் சேர்த்து, இந்தியாவில் தான் அதிக காசநோய் பாதிப்புகள் உள்ளன. இந்தியாவில் 2.64 மில்லியன் காசநோய் நோயாளிகள் உள்ளனர்.
- இது உலகின் மொத்த காசநோய் பாதிப்பில் 30% ஆகும்.
- உலகளவிலான இலக்கான 2030 ஆம் ஆண்டுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே, 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் காசநோயை ஒழிப்பதனை இந்தியா இலக்காக கொண்டுள்ளது.

| 8. சர்வதேச செய்திகள் | இந்தியாவிற்கு வெளியே நடைபெற்ற நிகழ்வுகள் |
|---|---|

## இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்




- இலங்கை விமானப்படை தனது கீர்த்திமிகு 70 ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடுகின்றது.
- 1951 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி 6 அதிகாரிகள் 21 வீரர்களுடன் இலங்கை விமானப்படை ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தியாவும் 17 நாடுகளும் U.S Anti-Dumping வரியை எதிர்கொள்கின்றன

- பல U.S. அலுமினிய அலாய் உற்பத்தியாளர்கள் குறைந்த விலையில் இறக்குமதி செய்வதால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக புகார் எழுந்ததை அடுத்து இந்த முடிவு அமெரிக்க வர்த்தக துறையால் எடுக்கப்பட்டது.
- இந்தியா மீதான U.S விசாரணையில், 2019 ஆம் ஆண்டில், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மானியங்களிலிருந்து 35 சதவீதம் முதல் 89 சதவீதம் வரை பயனடைந்துள்ளது.
- எனவே, இந்தியாவும் மற்ற 17 நாடுகளும் U.S Anti-Dumping வரியை எதிர்கொள்ளும்.

## ராணுவ பட்ஜெட்டை 6.8 சதவீதம் உயர்த்தியது சீனா

- உலகிலேயே ராணுவத்துக்கு அதிக செலவு செய்யும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனா 2-வது இடத்தில் உள்ளது. 20 லட்சம் வீரர்களுடன் சீன ராணுவம் உலகின் பெரிய ராணுவமாக திகழ்கிறது.
- 2021-ம் ஆண்டுக்கான ராணுவ பட்ஜெட்டை 6.8 சதவீதத்துக்கு சீனா உயர்த்தி உள்ளது. அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வரைவு பட்ஜெட்டில் ராணுவத்துக்கு 209 பில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.15 லட்சத்து 26 ஆயிரத்து 504 கோடி) ஒதுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மியான்மருடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ரத்து

- மியான்மர் ஆட்சியதிகாரத்தை ராணுவம் அபகரித்துள்ளதால், அந்நாட்டுடன் பாதுகாப்புத் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பை ரத்து செய்வதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.
- அந்நாட்டுடனான உறவை முறித்துக் கொள்வதாக நியூஸிலாந்து ஏற்கெனவே அறிவித்துள்ளது. இத்தகைய சூழலில், மியான்மருடன் பாதுகாப்புத் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பை ரத்து செய்வதாக ஆஸ்திரேலிய அரசு அறிவித்தது.
- இது தொடர்பாக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மாரீஸ் பெய்ன் கூறுகையில், "மியான்மருடனான ராணுவ பயிற்சி திட்டம்" 5 ஆண்டுகளுக்கு ரத்து செய்யப்படுகிறது. மியான்மரில் உள்ள ஆஸ்திரேலிய மனிதநேயக் குழு, அந்நாட்டு அரசுக்கு ஆதரவாக இனி செயல்படாது.

## இந்தியா - வங்கதேசம் இடையேயான நதியில் 'நட்பு பாலம்'




- இந்தியா - வங்கதேசம் எல்லையில் பாயும் ஃபெனி நதி மீது கட்டப்பட்டுள்ள 'நட்பு பாலத்தை' (மைத்ரி சேது) பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- எல்லை மாநிலமான திரிபுராவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையேயான எல்லையாக ஃபெனி நதி வரையறுக்கப்பட்டுள்ளது.
- திரிபுராவின் சப்ரூம் பகுதிக்கும் வங்கதேசத்தின் ராம்கர் பகுதிக்கும் இடையே அந்நதியின் மீது 1.9 கி.மீ. நீளத்துக்கு பாலம் கட்டப்பட்டுள்ளது. இரு நாடுகளிடையேயான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் பாலம் கட்டப்பட்டுள்ளது.

## சீனாவின் புதிய ஐந்தாண்டு திட்டம்

- சீனா தனது 14வது ஐந்தாண்டு திட்டத்தின் (2021 - 2025) சுருக்கத்தை முறையாக அங்கீகரித்துள்ளது.
- திபெத்தின் யர்லங் ஜாங்போ (Yarlung Zangbo) அல்லது பிரம்மபுத்ராவின் கீழ் பகுதிகளில் முதல் அணையை அமைப்பதும் மற்றும் இந்திய எல்லைக்கு அருகில் சிச்சுவான் - திபெத் ஆகியவற்றுக்கு இடையில் ஒரு இரயில் பாதையை அமைப்பதும் இதில் அடங்கும்.
- இது விரிவான பட்டை மற்றும் சாலை என்ற முன்னெடுப்பின் ஓர் அங்கமாக துருவப் பட்டுச் சாலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இலங்கையில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிய தடை; பதிவு செய்யாத மதரசாக்களை மூடவும் திட்டம்

- இலங்கையில் கடந்த 2019 - ம் ஆண்டு ஈஸ்டர் தினத்தில் தேவாலயங்களில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகளில் 260 - க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதற்கு சில இஸ்லாமிய அமைப்புகள் மீது குற்றம் சாட்டப்பட்டது.
- இந்த சம்பவத்தை தொடர்ந்து இலங்கையில் பெண்கள் பர்தா அணிய தற்காலிக தடை விதிக்கப்பட்டது.இந்த நிலையில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிய நிரந்தர தடை விதிக்கும் வகையில் திட்டம் ஒன்றை இலங்கை அரசு எடுத்துள்ளது. இதற்கான உத்தரவில் கையெழுத்திட்டுள்ள பொது பாதுகாப்புத்துறை மந்திரி சரத் வீரசேகரா, இதற்கான ஒப்புதலை பெறுவதற்காக கேபினட் மந்திரிகள் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவில் இத்தாலி

- இத்தாலி அரசு சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவில் (ISA - International Solar Alliance) இணைவதற்காக இந்தியாவுடன் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவு (International Solar Alliance – ISA) ஆனது கட்டமைப்பு ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் செய்ததை அடுத்து இத்தாலியக் குடியரசு ISA கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இத்திருத்தம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் ISA அமைப்பின் உறுப்பினர் நிலையைப் பெறும் வகையில் வழிவகை செய்துள்ளது.

**ISA: சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவு**

- இது 121 நாடுகளை உள்ளடக்கிய ஒப்பந்த அடிப்படையிலான நாடுகளுக்கு இடையேயான ஒரு கூட்டிணைவு ஆகும்.
- இந்தக் கூட்டிணைவு இந்தியாவினால் தொடங்கப்பட்டது.
- பெரும்பாலான உறுப்பினர் நாடுகள் சூரிய ஒளியை அதிகம் பெறும் நாடுகளாகும்.
- அதிக சூரிய ஒளியைப் பெறும் நாடுகள் என்பவை முழுவதுமாக (அ) பகுதியளவாக கடகரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே அமைந்துள்ள நாடுகள் ஆகும்.

## 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இந்திய பருவமழை இன்றைய ஆஸ்திரேலியாவை ஒத்திருக்கிறது

- சுமார் 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா பண்டைய சூப்பர் கண்டத்தில் இருந்து கோண்டுவானாவிலிருந்து பிரிந்து யூரேசியாவில் சேர சுமார் 9,000 கி.மீ தூரத்தில் வடக்கு நோக்கி நீண்ட பயணம் மேற்கொண்டது.
- டெக்கான் எரிமலை மாகாணம், மேகாலயாவின் கிழக்கு கரோ மலைகள், ராஜஸ்தானில் உள்ள குர்ஹா சுரங்கம் மற்றும் அசாமில் உள்ள மாகம் கோல்ஃபீல்ட் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட புதைபடிவ இலைகளின் உருவ எழுத்துக்களை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர்.
- இந்தியாவில் இருந்து வரும் புதைபடிவ இலைகள் ஆஸ்திரேலிய வகை பருவமழைக்கு ஏற்றவையாக இருந்தன, ஆனால் அதன் பயணத்தின் போது தற்போதைய இந்திய பருவமழை முறை அல்ல என்று முடிவுகள் சுட்டிக்காட்டின.




- புனரமைக்கப்பட்ட வெப்பநிலை தரவு, ஆய்வு செய்யப்பட்ட அனைத்து புதைபடிவ தளங்களிலும் காலநிலை வெப்பமாக இருந்தது (வெப்பமண்டலத்திலிருந்து துணை வெப்பமண்டல) 16.3–21.3 டிகிரி செல்சியஸ் வரை வேறுபடுகிறது.

ARUL IAS ACADEMY

### மகளிர் உரிமை ஒப்பந்தத்திலிருந்து துருக்கி விலகல்

- 10 ஆண்டுகளுக்கு முன்னர் துருக்கின் மிகப் பெரிய நகரான இஸ்தான்புல்லின் பெயரிடப்பட்ட அந்த ஒப்பந்தத்திலிருந்து அந்த நாடு விலகியுள்ளது.
- 47 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய கவுன்சில், துருக்கியின் இஸ்தான்புல் நகரில் கடந்த 2011 - ஆம் ஆண்டு நடத்திய மாநாட்டில் மகளிர் உரிமை ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பத்தில் முதலாவது நாடாக துருக்கி கையெழுத்திட்டது.

### உலகின் உயரமான ரயில்வே மேம்பாலம்

- செனாப் மேம்பாலம், இந்தியாவிலுள்ள ஜம்மு - காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் உள்ள பக்கலுக்கும் கவுரிக்கும் இடையில் இந்திய இரயில்வேயினால் கட்டப்பட்டு வரும் ஒரு எஃகு மற்றும் கான்கிரீட் வளைவு மேம்பாலமாகும்.
- ஜம்மு - காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றின் மீது கட்டப்பட்டு வரும் உலகின் இந்த மிக உயரமான இரயில் பாலம் அதன் கடைசி கட்டக் கட்டுமானப் பணி நிலையில் உள்ளது.
- இந்த இரயில் பாதை பாரீஸில் உள்ள ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டர் உயரமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- கட்டி முடிக்கப்பட்ட பிறகு, இது சீனாவில் உள்ள பீப்பன் நதியிலமைந்த சுய்பாய் இரயில் பாலத்தின் (275 மீ) சாதனையை முறியடிக்கும்.
- இது செனாப் நதிப்படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்தில் இருக்கும்.
- இந்தப் பாலத்தின் ஒட்டு மொத்த நீளம் 1,315 மீட்டர் ஆகும்.




### சர்ச்சைக்குரிய கடலில் சீனா 'ஊடுருவல்' செய்ததாக பிலிப்பைன்ஸ் குற்றம் சாட்டியது

- தென்சீனக் கடலில் ஒரு சர்ச்சைக்குரிய பாறைக்கு அருகே 200 க்கும் மேற்பட்ட போராளிகள் படகுகள் காணப்பட்டதை அடுத்து சீனா ஊடுருவியதாக பிலிப்பைன்ஸ் குற்றம் சாட்டியுள்ளது.
- பலாவன் தீவுக்கு மேற்கே 320 கி.மீ (175 கடல் மைல்) தொலைவில் உள்ள பூமரங் வடிவிலான விட்சன் ரீஃப் என்ற இடத்தில் படகுகளை வரிசைப்படுத்தியதை பிலிப்பைன்ஸ் கடலோர காவல்படை கண்டறிந்தது.

## இலங்கையின் மனித உரிமை மீறலுக்கு எதிரான தீர்மானம்

- ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையம் "இலங்கையில் நல்லிணக்க உணர்வு மற்றும் மனித உரிமைகளின் மேம்பாடு" எனும் தலைப்பிலான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.
- இத்தீர்மானம் 47 உறுப்பினர்களில் 22 உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்ததை அடுத்து நிறைவேற்றப்பட்டது.
- இத்தீர்மானத்திற்கு எதிராக 11 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.
- வாக்களிக்காமல் விலகிய 14 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.


Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Y | ARGENTINA | N | ERITREA | Y | NETHERLANDS |
| Y | ARMENIA | Y | FIJI | N | PAKISTAN |
| Y | AUSTRIA | Y | FRANCE | N | PHILIPPINES |
| Y | BAHAMAS | A | GABON | Y | POLAND |
| A | BAHRAIN | Y | GERMANY | Y | REPUBLIC OF KOREA |
| N | BANGLADESH | A | INDIA | N | RUSSIAN FEDERATION |
| N | BOLIVIA (PLURINATIONAL STATE OF) | A | INDONESIA | A | SENEGAL |
| Y | BRAZIL | Y | ITALY | N | SOMALIA |
| Y | BULGARIA | A | JAPAN | A | SUDAN |
| A | BURKINA FASO | A | LIBYA | A | TOGO |
| A | CAMEROON | Y | MALAWI | Y | UKRAINE |
| N | CHINA | Y | MARSHALL ISLANDS | Y | UNITED KINGDOM OF GREAT BRITAIN AND NORTHERN IRELAND |
| Y | CÔTE D'IVOIRE | A | MAURITANIA | Y | URUGUAY |
| N | CUBA | Y | MEXICO | N | UZBEKISTAN |
| Y | CZECH REPUBLIC | A | NAMIBIA | N | VENEZUELA (BOLIVARIAN REPUBLIC OF) |
| Y | DENMARK | A | NEPAL | | |

IN FAVOUR 22 Y | AGAINST 11 N | ABSTAIN 14 A

## இஸ்ரேலில் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் நெதன்யாஹு கட்சி வெற்றி


- இஸ்ரேலில் நடந்த தேர்தலில் மீண்டும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு வெற்றி பெற்று உள்ளார்.
- பொருளாதார சீர்கேடு, கொரோனா பரவலை கையாள்வதில் ஏற்பட்ட சிக்கல் உள்ளிட்ட காரணங்களால் இஸ்ரேல் பிரதமருக்கு கடும் நெருக்கடிகள் ஏற்பட்டு அதன் விளைவாக அங்கு கடந்த 2 ஆண்டுகளில் 4 முறை தேர்தல் நடக்கும் சூழல் நிலவியது.
- 4-வது முறையாக நடந்த தேர்தலில் பிரதமர் நெதன்யாஹு மீண்டும் ஆட்சியை கைப்பற்றினார்.

## பங்களாதேஷ் விடுதலை ஆண்டு விழா




- பங்களாதேஷ் தனது விடுதலை இயக்கத்தின் 50 ஆண்டுகளை நினைவுகூர்கிறது.
- மார்ச் 26, 1971 அன்று ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான முக்தி பஹினி (சுதந்திரப் போராளிகள்) சுதந்திரப் பிரகடனத்துடன் பங்களாதேஷ் விடுதலை இயக்கம் தொடங்கியது.

## மீண்டும் ஏவுகணை சோதனை: வட கொரியா





- அமெரிக்க ஜனாதிபதியாக பைடன் பதவியேற்ற பின் வட கொரியா நடத்தும் முதல் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது.
- அவர்கள் 450 கி.மீ பயணம் செய்து அதிகபட்சமாக 60 கி.மீ உயரத்தை அடைந்தனர். தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஒரு அவசர கூட்டம் துவக்கத்தில் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது.
- ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தின் படி, ஆயுதங்கள் மூலம் அச்சுறுத்துவதாக கருதி ஏவுகணை சோதனை மேற்கொள்ள வட கொரியாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இரண்டு நாட்களுக்கு முன் மஞ்சள் கடலில் குறுகிய தூரம் சென்று தாக்கக் கூடிய பாலிஸ்டிக் அல்லாத ஏவுகணையை சோதனை செய்து பரபரப்பை ஏற்படுத்திய வட கொரியா, தற்போது தொலை தூரம் பாயும் இரண்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை சோதனை செய்துள்ளது.

## டிஜிட்டல் சேவை வரி: இந்தியா உள்பட 6 நாடுகள் மீது நடவடிக்கை எடுக்க யுஎஸ்டிஆர் திட்டம்

- நாட்டின் ஆறு வர்த்தக பங்காளிகளுக்கு எதிரான வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் ஆஸ்திரியா, இந்தியா, இத்தாலி, ஸ்பெயின், துருக்கி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு எதிரான டிஜிட்டல் சேவை வரி விசாரணையின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
- இந்தியாவில் மின்னணு சேவைகளை அளிக்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ‘டிஜிட்டல் சேவை வரி’ என்ற புதிய வரி விதிப்பு முறையை கடந்த 2020 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தியா அமல்படுத்தியது.

## முதல் கப்பல் சுரங்கப் பாதை – நார்வே




- உலகின் முதல் கப்பல் சுரங்கப் பாதையை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள நார்வே கடலோர நிர்வாக அமைப்பிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
- இப்பாதை பிரத்தியேகமாக கப்பல்களுக்காகவே என்று கட்டப்படுகிறது.
- இந்தச் சுரங்கப்பாதைக்கு **“Stad Ship Tunnel”** என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது வடமேற்கு நார்வேயிலுள்ள மலைகள் நிறைந்த ஸ்டாட்ஹுவெட் தீபகற்பத்தின் கீழ் அமைக்கப்படும்.

**சுரங்கப்பாதை பற்றிய விவரங்கள்**

- 1.7 கி.மீ. நீளமுடைய இந்தச் சுரங்கப்பாதையானது 16,000 டன் எடையுள்ள கப்பல்களும் கடந்து செல்லும் வகையில் இருக்கும்.
- இந்தச் சுரங்கம் கப்பல்களுக்கு ஆபத்து மிக்க ஸ்டாட்ஹுவெட் கடலின் வழியே ஒரு பாதுகாப்பான வழியாக அமையும்.
- இந்தச் சுரங்க கட்டுமான பணிகள் 2022 ஆம் ஆண்டில் தொடங்கும்.

## சர்வதேச அறிவுசார் சொத்து குறியீடு

- 9வது சர்வதேச அறிவுசார் சொத்து குறியீட்டில் (IIP – Intellectual Property Index) 53 உலகப் பொருளாதாரங்களில் 38.40 மதிப்புகள் பெற்று இந்தியா 40வது இடத்தில் உள்ளது.
- “Recovery through Ingenuity 2021” என்று தலைப்பிடப்பட்ட இக்குறியீடு அமெரிக்க வர்த்தக மன்றத்தின் உலகளாவியப் புத்தாக்கக் கொள்கை மையத்தினால் (Global Innovation Policy Center – GIPC) வெளியிடப்பட்டது.
- இக்குறியீட்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.
- GIPC மையத்தினால் ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படும் IIP குறியீடு, 53 உலகப் பொருளாதார நாடுகளில் அறிவுசார் சொத்துரிமை, காப்புரிமை மற்றும் நகலுரிமை கொள்கைகள், அறிவுசார் சொத்துகளை வணிகமயமாக்கல் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்தல் போன்றவற்றை மதிப்பீடு செய்கின்றது.
- 53 நாடுகளில் 32 நாடுகள் நேர்மறையான மதிப்புகளைப் பெற்றுள்ளதால் 2020 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த உலகளாவிய அறிவுசார் சொத்துகளின் சூழ்நிலை மேம்பட்டு உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

**இந்திய - அமெரிக்க கூட்டு கடற்படை பயிற்சி: கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் தொடக்கம்**




- இரு நாடுகளிடையே வளர்ந்து வரும் பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த இரண்டு நாள் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.
- **'பாஸ்எக்ஸ்'** என்ற இந்த கூட்டுப் பயிற்சியில் இந்தியா சார்பில் 'ஷிவாலிக்' போர்க் கப்பலும், நீண்டதூர கண்காணிப்பு போர் விமானமான 'பி8ஐ' ஆகியவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா யுஎஸ்எஸ் தியோடோர் ரூஸ்வெல்ட் போர் விமானம் தாங்கி கப்பல் குழுவை ஈடுபடுத்தியுள்ளது.

**ராணுவ தளவாடங்கள் கூட்டுத் தயாரிப்பு: இந்தியா, தென் கொரியா முடிவு**



- தென்கொரிய பாதுகாப்புத் துறை அமைச்சர் சூவூக் 3 நாள் பயணமாக இந்தியா வந்தார். அவரும், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் சந்தித்துப் பேசினர். இந்தப் பேச்சுவார்த்தையின்போது, பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பில் இரு நாடுகளும் இணைந்து ஆராய்ச்சி, கூட்டு தயாரிப்பு, கூட்டு ஏற்றுமதியில் கவனம் செலுத்த முடிவு செய்தன.
- உத்தரபிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இரு பாதுகாப்புத் தொழில்துறை முனையங்களை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இந்த முனையத்தில் முதலீடு செய்வதன் மூலம், அதில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள தென்கொரிய அமைச்சர் விருப்பம் தெரிவித்தார்.

## ஆப்பிரிக்க வனம் மற்றும் சவானா (புல்வெளி) யானைகளின் எண்ணிக்கை குறைவு




- ஆப்பிரிக்கக் காட்டு யானைகள் "மிகவும் அருகி வரும் இனங்களாக" சேர்க்கப்பட்டு உள்ளன.
- ஆப்பிரிக்க சவானா புல்வெளி யானைகள் "அருகி வரும் இனங்களாக" (critically endangered) சேர்க்கப்பட்டு உள்ளன.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் **(International Union for Conservation of Nature – IUCN)** அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களின் மீதான சிவப்புப் பட்டியலால் செய்யப் பட்டுள்ளது.
- இந்த இரு இனங்களும் இதற்கு முன்பு 'பாதிக்கப்படக் கூடியவையாக' கருதப் பட்டன.
- மேலும் அவை இதற்கு முன்பு சிவப்புப் பட்டியலில் ஒரே இனமாகக் கருதப்பட்டது.
- IUCN அமைப்பின் கூற்றுப் படி புதிய மரபணுச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுக் கொண்டு இருப்பதால் இந்த இரு இனங்களும் தனித்தனியே மதிப்பிடப்படுகின்றன.
- கூடுதலாக, காட்டு யானைகள் மத்திய ஆப்பிரிக்காவின் வெப்பமண்டலக் காடுகளில் வாழ்வதால் அவை அரிதாகவே ஒன்றையொன்று சந்திக்கின்றன.
- சவானா (புல்வெளி) யானைகள் புல்வெளிகள் மற்றும் பாலைவனங்களைக் கொண்ட ஆப்பிரிக்காவின் துணை சஹாராப் பகுதிகளின் திறந்தவெளிகளில் வாழ்கின்றன.
- கடந்த 31 வருடங்களில் ஆப்பிரிக்க யானைகளின் எண்ணிக்கை 86 சதவீதம் குறைந்து உள்ளது.
- மேலும் IUCN அமைப்பின் கூற்றுப் படி, கடந்த 50 வருடங்களில் ஆப்பிரிக்க சவானா யானைகளின் எண்ணிக்கை 60 சதவீதம் குறைந்துள்ளது.
- இரு இனங்களும் ஒரு சேர சுமார் 4,15,000 யானைகள் இந்தக் கண்டத்தில் உள்ளன.
- தந்தத்திற்காகக் கடத்தப்படுதல் மற்றும் அவற்றின் இருப்பிடங்கள் வேளாண் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றப்படுதல் ஆகியவற்றால் இத்தகைய எண்ணிக்கை குறைபாடு உண்டாகிறது என காரணம் கூறப்படுகிறது.
- இந்த மாற்றங்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது.

**எரிசக்தி துறை உறவுகளை புதுப்பிக்க இந்தியா - அமெரிக்கா ஒப்புதல்**

- மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் ஜெனிஃபர் கிரான்ஹோல்மை சந்தித்துப் பேசினார். அப்போது இரு தலைவர்களும் இந்தியா - அமெரிக்கா இடையிலான எரிசக்தி ஒத்துழைப்பை மறுஆய்வு செய்து சீரமைப்பது என பரஸ்பரம் ஒப்புக் கொண்டனர்.
- பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் பசுமை எரிசக்தி ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் தூய்மையான எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு அதிக முன்னுரிமை தந்து செயல்பட்டு வருகின்றனர். அதனை பிரதிபலிக்கும் வகையில் இந்த எரிசக்தி உறவுகளை புதுப்பிக்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

**அமெரிக்காவின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய திட்டம் - ஜோ பைடன் அறிவிப்பு**




- அமெரிக்காவின் உள்கட்டமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்த சுமார் 2 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவில் அதிபர் ஜோ பைடன் புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்.
- இதுதொடர்பாக, பென்சில்வேனியாவின் பிட்ஸ்பர்க்கில் பேசிய போது ஜோ பைடன் கூறியதாவது:
- உள்கட்டமைப்பு வசதிகள், தட்பவெப்ப மாற்றம், கொரோனா தொற்று போன்றவற்றால் அமெரிக்காவின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அவற்றை மீண்டும் கட்டமைக்க வேண்டியது அவசியம். அதனால், உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த இதுவரை இல்லாத வகையில் 2 டிரில்லியன் டாலர்கள் முதலீடு செய்யும் திட்டத்தை துவக்கியுள்ளேன். உலகின் மிகப் பெரிய பொருளாதார சக்திமிக்க நாடாக, அமெரிக்கா தொடர வேண்டும் என்பது தான் என் விருப்பம். இந்த திட்டத்தின் மூலம் அமெரிக்காவில் வேலைவாய்ப்புகள், வரலாற்றில் இல்லாத வகையில் அதிகரிக்கும். பொருளாதாரமும் மாபெரும் வளர்ச்சி பெறும். இரண்டாம் உலகப் போர் முடிந்த பின், அமெரிக்காவில் வேலை வாய்ப்புகளை உருவாக்க அதிக முதலீடு செய்யப்பட்டது. அதன்பின், தற்போது தான் வேலைவாய்ப்பு மற்றும் உள்கட்டமைப்புக்காக அதிக முதலீடு செய்யப்படுகிறது என தெரிவித்தார்.

| # 9. பிற மாநில செய்திகள் | இந்தியாவின் பிற மாநிலங்களில் நடைபெற்ற நிகழ்வுகள் |
|---|---|

**இந்தியாவின் கொரோனா இல்லாத மாநிலமானது அருணாசலப் பிரதேசம்!**

- வடகிழக்கு மாநிலமான அருணாசலப் பிரதேசத்தில் முதல் மருத்துவமனையிலிருந்த 3 கொரோனா நோயாளிகள் குணமடைந்துள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் யாருக்கும் தொற்று கண்டறியப்படவில்லை. இதனால் இந்தியாவின் முதல் கொரோனா இல்லாத மாநிலமானது.

**கர்நாடகாவின் பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கை - 2021**




**ER & D இன் முக்கியத்துவம்:**

- தொழில்துறை உச்ச அமைப்பான நாஸ்காம் கருத்துப்படி, அடுத்த ஐந்து ஆண்டுகளில் ER & D நாட்டில் 100 பில்லியன் டாலர் தொழிலாக மாறும் சாத்தியம் உள்ளது.
- நாட்டில் ER & D துறை வேகமாக வளர்ந்து வரும் தொழில் ஆகும், இது CAGRன் 12.8% ஆகும். இதற்கிடையில், உலகளாவிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை 2025 ஆம் ஆண்டில் 2 டிரில்லியன் டாலர் செலவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய கொள்கையின் சிறப்பம்சங்கள்:**

- அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் இத்துறையின் பங்களிப்பை 45% ஆக உயர்த்த முற்படுகிறது.
- இது ஐந்து ஆண்டுகளில் ER&D இடத்தில் 50,000 க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- இந்தத் துறையிலிருந்து வெளிவரும் எதிர்கால வாய்ப்புகளைப் பயன்படுத்த மாநிலத்தை தயார்படுத்துவதே கொள்கை நோக்கமாகும்.
- இது விண்வெளி மற்றும் பாதுகாப்பு போன்ற ஐந்து முக்கிய மையங்களை அடையாளம் கண்டுள்ளது; ஆட்டோ, ஆட்டோ கூறுகள் மற்றும் ஈ.வி; உயிரி தொழில்நுட்பம், மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள்; குறைக்கடத்திகள், தொலைத் தொடர்பு, ESDM; மற்றும் மென்பொருள் தயாரிப்புகள்.

## இமாலய செரோ (மலை ஆடு) – அசாம்

- இமயமலையைச் சேர்ந்த பாலூட்டியான "இமாலய செரோ" ஆனது (மலை ஆடு) முதன்முறையாக அசாமில் காணப்பட்டுள்ளது.
- இமாலய செரோ ஆனது ஆடு, கழுதை, பசு மற்றும் பன்றி ஆகியவற்றின் கலப்பு இனத்தை ஒத்திருக்கின்றது.



- இமயமலை மலை ஆடு ஆனது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களின் சிவப்புப் பட்டியலில் "பாதிக்கப் படக்கூடிய இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் அட்டவணை I என்பதில் பட்டியலிடப்பட்டுள்ளது.

## 1982 - ம் ஆண்டிலேயே இந்தியாவில் அறிமுகமான 'இவிஎம்' இயந்திரம்



- கடந்த 1982-ம் ஆண்டு கேரளாவில் உள்ள எர்ணாகுளம் மாவட்டத்தில், பரவூர் சட்டப்பேரவைத் தொகுதியில் 50 வாக்குப்பதிவு மையங்களில் மட்டுமே மின்னணு வாக்கு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியத் தேர்தல் வரலாற்றிலேயே முதன்முதலாக மின்னணு வாக்கு இயந்திரங்கள் இங்குதான் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இந்தத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் வேட்பாளராக ஏ.சி.ஜோஸும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் என்.சிவன் பிள்ளையும் போட்டியிட்டனர். இருவருக்கும் கடும் நெருக்கடியான போட்டி இருந்தது. இதில் 123 வாக்குகள் வித்தியாசத்தில் சிவன் பிள்ளை வென்றார்.
- தேர்தல் வெற்றியில் நம்பிக்கையில்லாத ஏ.சி.ஜோஸ், கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதில், தேர்தல் விதிகள் 1961-ன்படி, தேர்தல் ஆணையம் மின்னணு வாக்கு இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதியில்லை.
- உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், "மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, தேர்தல் விதிகள் 1961-ன்படியும் வாக்குச்சீட்டு முறையில்தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும். புதிய முறையில் தேர்தல் நடத்தப்படக் கூடாது" எனத் தெரிவித்தது.
- **1998-ம் ஆண்டு முதல் பரவலாக நாடு முழுவதும் மின்னணு வாக்கு இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்தன.**
- புதிய தலைமுறை ஈ.வி.எம்-களில் **வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை** (VVPAT) உள்ளது, இது வேட்பாளரின் பெயர், சின்னம் மற்றும் வரிசை எண்ணைக் கொண்டிருக்கும் ஒரு சிறிய சீட்டு காகிதத்தை அச்சிடுகிறது.
- 2013 ஆம் ஆண்டில் ஈ.வி.எம் நடைமுறையில் துல்லியம் மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்த VVPAT பயன்படுத்த உயர் நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

## மீண்டும் வருகிறது ஹைதராபாத்தின் அடையாளமான இரட்டை-டெக்கர் பேருந்துகள்



- 20 ஆண்டுகளுக்கு பிறகு ஹைதராபாத்தில் மீண்டும் இரட்டை அடுக்கு பேருந்துகள் இயக்கப்படும் என்று தெலங்கானா மாநில போக்குவரத்துத் துறை அறிவித்திருக்கிறது.
- அனுபவமிக்க உற்பத்தியாளர்களிடமிருந்து 25 இரட்டை-டெக்கர் பேருந்துகளை வாங்குவதற்காக தெலங்கானா ஆர்டிசி டெண்டர்கள் வழங்கியுள்ளது.


## புதிய வரிகள் இல்லாத கர்நாடக பட்ஜெட்

- புதிய வரிகள் இல்லாத பட்ஜெட்டை முதல்வர் எடியூரப்பா தாக்கல் செய்தார்.

**சிறப்பம்சங்கள்**

- அரசுத் துறை அலுவலகங்களுக்காக பெங்களூரில் 25 மாடி இரட்டை கோபுர கட்டிடம். பெங்களூரில் உள்ள ஆனந்த் ராவ் வட்டத்தில் தலா 25 மாடிகளைக் கொண்ட இரட்டை கோபுரக் கட்டிடம் ரூ .400 கோடி செலவழித்து அனைத்து அரசுத் துறைகளின் பணிக்கும் வசதியாக இருக்கும் என்று முதல்வர் எடியூரப்பா கூறுகிறார்.
- 58.2 கிலோ மீட்டர் நீளம் கொண்ட வெளிவட்டச்சாலை - விமான நிலைய மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் திட்ட மதிப்பு ரூ.14 ஆயிரத்து 788 கோடி ஆகும். இதற்காக ரூ.1,600 கோடி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.
- பெங்களூரில் ஏரிகளை உருவாக்க ரூ100 கோடி.

## பள்ளிகள் மற்றும் அங்கன்வாடியில் நீர் வழங்கல் நிலை




| State |
|---|
| Andhra Pradesh |
| Goa |
| Tamil Nadu |
| Haryana |
| Himachal Pradesh |
| Telangana |
| Punjab |

| State | % of schools with tap water supply |
|---|---|
| Uttar Pradesh | 7.93 |
| West Bengal | 10.89 |
| Jharkhand | 12.99 |

- அக்டோபர் 2020 இல் ஜல் சக்தி அமைச்சகத்தால் 100% குழாய்நீர் இணைப்பு 100 நாள் பிரச்சாரம் இருந்தபோதிலும், நீர்வளங்கள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, அரசு பள்ளிகளில் பாதி மற்றும் அங்கன்வாடிஸ் மட்டுமே குழாய் நீர் வழங்கலைக் கொண்டுள்ளன.
- முதன்மை ஜல் ஜீவன் இயக்கத்தின் முன்னேற்றத்தையும் குழு குறிப்பிட்டது.
- இது அக்டோபர் 2, 2020 அன்று (காந்தி ஜெயந்தி) தொடங்கப்பட்டது.
- 100 நாள் காலம் 2021 ஜனவரி 10 ஆம் தேதியுடன் முடிவடைந்திருக்க வேண்டும்.
- ஏழு மாநிலங்கள் - ஆந்திரா, கோவா, ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் பஞ்சாப் - 100% அனைத்து பள்ளிகளிலும் குழாய்நீர் இணைப்பு உள்ளது.

## கேரளாவில் 25 ஆண்டுகளுக்கு பிறகு பெண் வேட்பாளரை களம் இறக்கிய முஸ்லிம் லீக்

- கேரள சட்டப்பேரவைக்கு வரும் ஏப்ரல் 6-ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியில் (யுடிஎப்) இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி(ஐயுஎம்எல்) அங்கம் வகிக்கிறது.
- கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு 1996-ம் ஆண்டு நடந்த தேர்தலில் கமாருண்ணிசா அன்வர் என்ற பெண்ணுக்கு ஐயுஎம்எல் வாய்ப் பளித்தது.
- அவர் மார்க்சிஸ்ட் வேட்பாளரிடம் 8 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார். அதன் பின்னர் பெண்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.
- இந்நிலையில் நூர்பினா அந்த வரலாற்றை மாற்றியிருக்கிறார்.

## ஜம்மு - காஷ்மீரில் எந்த வெளிநாட்டவரும் நிலம் வாங்கவில்லை என்று மத்திய அரசு நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்துள்ளது

- ஜம்மு - காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, மாநிலத்தை ஒரு யூனியன் பிரதேசமாக மாற்றிய ஒரு வருடத்திற்கும் மேலாக, நிர்வாகம் 22,000 க்கும் மேற்பட்ட அரசு வேலைகளை அடையாளம் கண்டுள்ளது, ஆனால் ஆட்சேர்ப்பு இன்னும் நடைபெறவில்லை.
- உள்துறை அமைச்சகம் (எம்.எச்.ஏ) பாராளுமன்றக் குழுவிற்கு அளித்த தகவல்களின்படி, J & K வெளியில் இருந்து எந்தவொரு நபரும் இதுவரை நிலம் வாங்கவில்லை.

## தெலுங்கானா பட்ஜெட் செலவு ₹2.30 லட்சம் கோடி

- மாநில அமைச்சர் பட்ஜெட்டில் நிதியமைச்சர் டி.ஹரீஷ் ராவ் சமர்ப்பித்தார் 2021 - 22 ஆம் ஆண்டிற்கான தெலுங்கானாவின் இலக்கு 2.30 லட்சம் கோடி ரூபாய் ஆகும்,
- இது 2020 - 21க்கான திட்டங்களை விட குறைந்தது, ₹48,000 கோடி அதிகம் மற்றும் சமீபத்தில், ₹64,000 கோடியாக திருத்தப்பட்டது.

## RE-HAB திட்டம்




- இத்திட்டம் கர்நாடகாவிலுள்ள குடகுவின் செல்லூர் கிராமத்தில் தொடங்கப்பட்ட ஒரு சோதனை திட்டமாகும்.
- தேனீக்களைப் பயன்படுத்தி யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நிலவும் மோதலைக் குறைத்தல் (Reducing Elephant – Human Attacks using Bees) என்பது தான் RE-HAB திட்டம் ஆகும்.
- இத்திட்டத்தில் நகர்ஹோலே தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தை (Nagarahole National Park and Tiger Reserve) சுற்றிலும் தேனீக்களைக் கொண்ட பெட்டிகள் வைக்கப்படும்.
- இது மனிதனுக்கும் யானைகளுக்கும் இடையேயான மோதல்களைத் தணிக்க உதவும்.
- இத்திட்டம் காதி மற்றும் கிராமப்புற தொழில்துறை ஆணையத்தின் கீழ் உள்ள தேசிய தேன் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாகும்.

## காஷ்மீருக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள்

- ஜம்மு - காஷ்மீரின் மத்திய பிராந்தியத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2020 ஜனவரியில் 3,700 பேரிடமிருந்து 2021 ஜனவரியில் 19,000 ஆக உயர்ந்துள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரஹ்லத் சிங் படேல் மாநிலங்களவைக்குத் தெரிவித்தார்.

**ரண்தம்போரில் - ஆறு புலிகள் காணவில்லை**



- ஆறு புலிகள் - நான்கு பெரிய மற்றும் இரண்டு குட்டி புலிகள் - ராஜஸ்தானின் ரணதம்போர் புலி சரணாலயத்தில் 2020 மார்ச் முதல் கணக்கிடப்படவில்லை. இருப்பினும், மாநில வன அதிகாரிகள் அவர்களை "காணவில்லை" என்று முத்திரை குத்த தயாராக இல்லை, மேலும் அவர்கள் வேட்டையாடப்பட்டிருக்கலாம் என்ற அறிக்கைகளை மறுத்தனர்.
- கடந்த ஆண்டு பகிரங்கமாக வெளியிடப்பட்ட சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்த தொகுதியில் 90% க்கும் மேற்பட்ட புலிகள் எண்ணிக்கையில் சுமார் 53 புலிகள் உள்ள பிராந்தியத்தில் புலிகளின் ஒரே ஆதாரமாக ரணதம்போர் ரிசர்வ் உள்ளது.

**கடப்பா எஃகு ஆலையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக ₹1,815 கோடி.**



- கடப்பா மாவட்டத்தின் ஜம்மலமடுகு மண்டலத்தில் உள்ள ஒருங்கிணைந்த எஃகு ஆலைக்கான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தின் (ஈ.எம்.பி) ஒரு பகுதியாக, காற்று, நீர் மற்றும் ஒலி மாசு கட்டுப்பாடு, கிரீன் பெல்ட் மற்றும் திறந்த பகுதி மேம்பாட்டுக்கான மூலதன செலவுக்காக மாநில அரசு சுமார் 1,815 கோடியை ஒதுக்கியுள்ளது.

## லடாக்கில் உள்ள சீன எல்லையில் மூன்று சாலைகள் அமைக்கிறது மத்திய பொதுப்பணித் துறை

- மத்திய பொதுப்பணித் துறை (CPWD) லடாக்கில் இந்தியா - சீனா எல்லையில் மூன்று உயரமான சாலைகளை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் மொத்தம் 212.99 கோடி மதிப்புள்ள டெண்டர்களை மிதத்துள்ளது.
- ஷிலுங் லா, நைக்மிகில் மற்றும் ஹெனாவில் உள்ள இந்தோ - திபெத்திய எல்லை போலீஸ் தளங்களில் இருந்து "இந்தோ சீனா எல்லைக்கு செல்லும் சாலைகள்" என்று திட்டங்கள் பெயரிடப்பட்டுள்ளன.

## ஆந்திரா அரசு மது கொள்கையில் மாற்றங்களைச் செய்ய வாய்ப்புள்ளது

- 2020 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை ஐ.எம்.எஃப்.எல் விற்பனை 126.55 லட்சம் வழக்குகள், இது 2019 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 239.56 லட்சம் வழக்குகள், இது 47.17% குறைந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் பீர் விற்பனையானது 2019 ஆம் ஆண்டில் 186.36 லட்சம் வழக்குகளில் இருந்து 126.55 லட்சம் பாட்டில்களாகக் குறைந்துள்ளது, இதன் விளைவாக 80.91% நுகர்வு குறைந்தது.
- மதுபானக் கடைகளின் எண்ணிக்கை 4,380 லிருந்து 2,934 ஆக 33% குறைக்கப்பட்டது. மொத்தத்தில், 43,000 கடைகள் மூடப்பட்டன.

## ஆசியாவின் மிகப்பெரிய துலிப் மலர் தோட்டம் திறக்கப்பட்டது



- ஆசியாவின் மிகப்பெரிய துலிப் தோட்டம் ஸ்ரீநகரில் திறக்கப்பட்டது, ஜபர்வான் மலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது 30 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட 15 லட்சம் பூக்களில் 25% மலர்ந்து சுமார் 4,000 பார்வையாளர்கள் மகிழ்ந்தனர்.


## அரசினால் இயக்கப்படும் முதல் கால்நடை அவசர ஊர்தி அமைப்பு




- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது விலங்குகளுக்காக அரசினால் இயக்கப்படும் இந்தியாவின் முதல் (விலங்கு) கால்நடை அவசர ஊர்தி அமைப்பினை அமைக்க முடிவெடுத்துள்ளது.
- இம்முடிவானது மாநிலத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை மருத்துவத் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு நடமாடும் அவசர கால்நடை மருத்துவ ஊர்தியை அமைக்க கால்நடை வளர்ப்புத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**இமாச்சலில் வனவிலங்கு சரணாலயத்தில் 27 புலம்பெயர்ந்த பறவைகள் இறந்து கிடந்தன**

- இமாச்சல பிரதேசத்தின் பாங் அணை வனவிலங்கு சரணாலயத்தில் மார்ச் 25ம் தேதி முதல் 27 புலம்பெயர்ந்த பறவைகள் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எச்.5.என்.1 ஏவியன் இன்ஃபுளுவன்சா வைரஸ் தொற்றால் இவை உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுவதால் சரணாலயம் மூடப்பட்டுள்ளது.




**பாங் அணை வனவிலங்கு சரணாலயம்:**



- இமாச்சலப் பிரதேசத்தில் பியாஸ் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட ஒரு செயற்கைக் அணை ஆகும்.
- அணையால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கம் மகாராணா பிரதாப் சாகர் என்று அழைக்கப்படுகிறது, இது ஒரு புகழ்பெற்ற பறவைகள் சரணாலயம் ஆகும்.
- அணை நீர்மின்சார உற்பத்தி மற்றும் நீர்ப்பாசனத்திற்காக கட்டப்பட்டது.
- பாங் அணை வனவிலங்கு சரணாலயமும் ஒரு ராம்சார் தளமாகும்.
- சிவாலிக் மலைகளின் ஈரநில மண்டலத்தில் மஹாராணா பிரதாப் சாகர் அமைந்துள்ளது.

**குறிப்பு:**

- இந்த ஆண்டு ஜனவரியில், ஏவியன் இன்ஃப்ளுயன்ஸா (எச் 5 என் 1) வைரஸ் தொற்றால் இதே சரணாலயத்தில் 5,000 க்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த பறவைகள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

**கர்னூல் விமான நிலையம் – ஆந்திரப் பிரதேசம்**

- மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் ஆந்திர மாநில முதல்வர் YS ஜகன்மோகன் ரெட்டி ஆகியோர் ஆந்திரப் பிரதேசத்தில் ஓர்வக்கல் என்ற இடத்தில் கர்னூல் விமான நிலையத்தைத் திறந்து வைத்தனர்.
- கடப்பா, விசாகப் பட்டினம், திருப்பதி, இராஜமுந்திரி மற்றும் விஜயவாடா ஆகியவற்றையடுத்து ஆந்திர மாநிலத்தில் ஆறாவது விமான நிலையமாக கர்னூல் செயல்பட உள்ளது.
- கர்னூல் விமான நிலையத்தில் விமானச் சேவைகள் பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் (Ude Desh Ka Aam Nagrik – (RCN – UDAN) தொடங்கப்படும்.
- பெங்களூரு, விசாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளுக்கான நேரடி விமானப் பயணச் சேவை இந்தப் பகுதியினை தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கும்.
- இந்தப் பாதைகளுக்கு 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற UDAN – 4 என்ற திட்டத்தின் ஏல முறையின் கீழ் பயணியர் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியது.

**கர்னூல்**

- கர்னூல் ஆந்திரப் பிரதேசத்தின் நீதித் தலைநகரம் ஆகும்.
- கர்னூல் நகரம் துங்கபத்திரா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.
- அதற்கிணையாக நல்லமலைத் தொடர் செல்கிறது.

ARUL IAS ACADEMY

| 10. விளையாட்டு செய்திகள் | இது விளையாட்டுகளை பற்றியது |
|---|---|

## உகாண்டா பாட்மிண்டன்: வருண், மாளவிகாவுக்கு பட்டம்




- உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பாட்மிண்டன் போட்டியில் இந்திய இளம் போட்டியாளர்களான வருண் கபூர், மாளவிகா பன்சோத் ஆகியோர் தங்களது பிரிவில் சாம்பியன் ஆகினர்.
- ஆடவர் ஒற்றையரில் ஜூனியர் பிரிவில் உலகின் **2**-ஆம் நிலையில் இருக்கும் இந்தியாவின் வருண் கபூர் 21-18, 16-21, 21-17 என்ற செட்களில் போட்டித்தரவரிசையில் 7-ஆவது இடத்தில் இருந்த மற்றொரு இந்தியரான சங்கர் முத்துசாமியை வீழ்த்தி வாகை சூடினார்.
- மகளிர் ஒற்றையர் பிரிவில், போட்டித்தரவரிசையில் 2-ஆவது இடத்தில் இருந்த மாளவிகா பன்சோத் 17-21, 25-23, 21-10 என்ற செட்களில் அனுபமா உபாத்யாயவை வென்றார்.

## 6 பந்துகளில் 6 சிக்ஸர் - பொல்லார்ட் சாதனை



**SIX SIXES IN AN OVER**

**INTERNATIONAL CRICKET: ODIs**

| BATSMAN | BOWLER | MATCH | VENUE | YEAR |
|---|---|---|---|---|
| Herschelle Gibbs | Daan van Bunge | South Africa v Netherlands | St. Kitts | 2007 |

**T20Is**

| BATSMAN | BOWLER | MATCH | VENUE | YEAR |
|---|---|---|---|---|
| Yuvraj Singh | Stuart Broad | India v England | Durban | 2007 |
| **Kieron Pollard** | **Akila Dananjaya** | **West Indies v Sri Lanka** | **Antigua** | **2021** |

**DOMESTIC CRICKET: FIRST CLASS**

| BATSMAN | BOWLER | MATCH | VENUE | YEAR |
|---|---|---|---|---|
| Sir Garfield Sobers | Malcolm Nash | Nottinghamshire v Glamorgan | Swansea | 1968 |
| Ravi Shastri | Tilak Raj | Bombay v Baroda | Bombay | 1985 |

**T20s**

| BATSMAN | BOWLER | MATCH | VENUE | YEAR |
|---|---|---|---|---|
| Ross Whiteley | Karl Carver | Worcestershire Rapids v Yorkshire Vikings | Headingley | 2017 |
| Hazratullah Zazai | Abdullah Mazari | Kabul Zwanan v Balkh Legends | Sharjah | 2018 |
| Leo Carter | Anton Devcich | Canterbury Kings v Northern Knights | Christchurch | 2020 |

- கீரன் பொல்லார்ட் அவர்கள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் ஒரு ஓவரில் 6 சிக்ஸர்களை அடித்த மூன்றாவது மட்டைப்பந்து வீரராக உருவெடுத்துள்ளார்.
- ஆன்டிகுவாவில் நடத்தப்பட்ட டி - 20 போட்டியில் இலங்கையின் அகிலா தனஞ்சயாவின் ஓவரில் கீரன் பொல்லார்ட் அவர்கள் 6 சிக்சர்களை அடித்தார்.
- தென்னாப்பிரிக்காவின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரரான ஹெர்ஷல் கிப்ஸ் 2007 ஆம் ஆண்டு நெதர்லாந்துக்கு எதிரான உலகக் கோப்பைப் போட்டியில் இந்த சாதனையை நிகழ்த்தினார்.
- யுவராஜ் சிங்கிற்குப் பிறகு டி - 20 போட்டிகளில் சாதனை படைத்த 2வது மட்டைப்பந்து வீரர் பொல்லார்ட் மட்டுமே ஆவார்.

## ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா புதிய தேசிய சாதனை



- 3-வது இந்தியன் கிராண்ட்பிரி தடகள போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நடந்தது.
- இதில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு ஏற்கனவே தகுதி பெற்று விட்ட இந்திய வீரரான அரியானாவை சேர்ந்த 24 வயது நீரஜ் சோப்ரா தனது 5-வது முயற்சியில் 88.07 மீட்டர் தூரம் வீசி புதிய தேசிய சாதனை படைத்ததுடன், தங்கப்பதக்கத்தையும் தனதாக்கினார்.
- இதற்கு முன்பு 2018-ம் ஆண்டு ஆசிய விளையாட்டு போட்டியில் நீரஜ் சோப்ரா 88.06 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்ததே தேசிய சாதனையாக இருந்தது.

## மேட்டியோ பெலிகோன் தரவரிசை சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் சரிதா வெள்ளிப் பதக்கம் வென்றார்.




- இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் இந்தியாவின் சரிதா தனது இறுதிச்சுற்றில் 2-4 என்ற கணக்கில் பல்கேரியாவின் ஜியூலியா பெனால்பெரிடம் தோல்வி கண்டார். இதனால் அவர் வெள்ளிப் பதக்கத்தோடு வெளியேற நேர்ந்தது.
- ஆடவர் 72 கிலோ எடைப் பிரிவு கிரேக்கோ ரோமன் பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்தியாவின் குல்தீப் மாலிக், ரஷியாவின் சிங்கிஸ் லேபஸனோவை வீழ்த்தி வெண்கலம் வென்றார்.
- அதேநேரத்தில் ஆடவர் 97 கிலோ எடைப் பிரிவு ஃப்ரீஸ்டைல் போட்டியில் இந்தியாவின் சத்திவார்ட் காடியன் 1-8 என்ற கணக்கில் துருக்கியின் இப்ராஹிம் சிப்ட்சியிடம் தோல்வி கண்டார்.

## சர்வதேச மல்யுத்தம்: தங்கம் வென்றார் பஜ்ரங் புனியா



- இத்தாலியில் நடைபெற்ற மேட்டியோ பெலிகோன் தரவரிசை சர்வதேச மல்யுத்தப் போட்டியில் ஆடவருக்கான 65 கிலோ பிரிவில் இந்தியாவின் பஜ்ரங் புனியா தங்கப் பதக்கம் வென்றார். இதன்மூலம் சர்வதேச தரவரிசையில் அவர் மீண்டும் முதலிடம் பிடித்தார்.

## மித்தாலி ராஜ்




| | M | Inns | Runs | HS | Avg. | 50s/100s |
|---|---|---|---|---|---|---|
| Tests | 10 | 16 | 663 | 214 | 51.00 | 4/1 |
| ODIs | 212 | 191 | 6974 | 125* | 50.53 | 54/7 |
| T20Is | 89 | 84 | 2364 | 97* | 37.52 | 17/0 |

- சர்வதேசக் கிரிக்கெட்டில் அனைத்து வகையான ஆட்டங்களிலும் 10,000 ரன்களைக் கடந்த முதலாவது இந்தியப் பெண் கிரிக்கெட் வீரர் மித்தாலி ராஜ் ஆவார்.
- இவர் லக்னோவில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்காவிற்கு இடையே நடைபெற்ற மூன்றவாது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் போது இச்சாதனையை நிகழ்த்தினார்.
- இச்சாதனையை நிகழ்த்திய இரண்டாவது பெண் கிரிக்கெட் வீராங்கனை மித்தாலி ராஜ் ஆவார்.
- இச்சாதனையை நிகழ்த்திய முதலாவது பெண் கிரிக்கெட் வீராங்கனை இங்கிலாந்தைச் சேர்ந்த சாரலேட் எட்வர்ட்ஸ் (Charlotte Edwards) என்பவராவார்.

## விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட்: மும்பை அணி 4-வது முறையாக 'சாம்பியன்'

- டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி மைதானத்தில் நடந்த விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட்டில் மும்பை அணி 4-வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
- ஏற்கனவே 2003-04, 2006-07, 2018 ஆகிய ஆண்டுகளிலும் கோப்பையை வென்று இருந்தது.

| ஆண்டு | இறுதி ஹோஸ்ட் | வெற்றியாளர் | ரன்னர் - அப் |
|---|---|---|---|
| 2002 - 03 | இறுதி இல்லை | தமிழ்நாடு | பஞ்சாப் |
| 2003 - 04 | இறுதி இல்லை | மும்பை | வங்காளம் |
| 2004 - 05 | மும்பை | பகிரப்பட்டது: தமிழ்நாடு (2) மற்றும் உத்தரப்பிரதேசம் | |
| 2005 - 06 | மும்பை | ரயில்வே | உத்தரபிரதேசம் |
| 2006 - 07 | ஜெய்ப்பூர் | மும்பை (2) | ராஜஸ்தான் |
| 2007 - 08 | விசாகப்பட்டினம் | சவுராஷ்டிரா | வங்காளம் (2) |
| 2008 - 09 | அகர்தலா | தமிழ்நாடு (3) | வங்கம் (3) |
| 2009–10 | அகமதாபாத் | தமிழ்நாடு (4) | வங்கம் (4) |
| 2010–11 | இந்தூர் | ஜார்க்கண்ட் | குஜராத் |
| 2011–12 | டெல்லி | வங்காள | மும்பை |
| 2012–13 | விசாகப்பட்டினம் | டெல்லி | அசாம் |
| 2013–14 | கொல்கத்தா | கர்நாடக | ரயில்வே |
| 2014–15 | அகமதாபாத் | கர்நாடகா (2) | பஞ்சாப் (2) |
| 2015–16 | பெங்களூரு | குஜராத் | டெல்லி |
| 2016–17 | டெல்லி | தமிழ்நாடு (5) | வங்கம் (5) |
| 2017–18 | டெல்லி | கர்நாடகா (3) | சவுராஷ்டிரா |
| 2018 - 19 | பெங்களூரு | மும்பை (3) | டெல்லி (2) |
| 2019 - 20 | பெங்களூரு | கர்நாடகா (4) | தமிழ்நாடு |
| 2020 - 21 | டெல்லி | மும்பை (4) | உத்தரபிரதேசம் |

## துபாய் ஓபன்: முகுருஜா சாம்பியன்




- துபாய் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.
- துபாயில், பெண்களுக்கான WTA ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு பைனலில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஜா, செக்குடியரசின் பார்போரா கிரெஜிகோவா மோதினர். 'டை பிரேக்கர்' வரை சென்ற முதல் செட்டை 7–6 எனக் கைப்பற்றிய முகுருஜா, 2வது செட்டை 6–3 என தன்வசப்படுத்தினார்.

## தேசிய சீனியர் தடகளம்: 200 மீட்டர் ஓட்டத்தில் பி.டி. உஷாவின் சாதனையை முறியடித்தார் தனலட்சுமி




- 24-வது பெடரேஷன் கோப்பைக்கான தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நடந்து வருகிறது.
- பெண்களுக்கான 200 மீட்டர் ஓட்டத்தின் தகுதி சுற்றில் தமிழகத்தின் எஸ்.தனலட்சுமி (23.26 வினாடி), முன்னணி வீராங்கனையான அசாமை சேர்ந்த ஹிமா தாஸ்சை (24.39 வினாடி) பின்னுக்கு தள்ளி தனது பிரிவில் முதலிடத்தை பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

## தேசிய சீனியர் தடகளம்: தமிழகத்துக்கு இரு தங்கம்

- ஃபெடரேஷன் கோப்பை சீனியர் தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழகத்துக்கு இரு தங்கப் பதக்கம் கிடைத்தது.
- ஆடவருக்கான 110 மீட்டர் தடை தாண்டுதலில் தமிழகத்தின் பி.வீரமணி (14.57 விநாடிகள்) முதலிடம் பிடித்தார். கர்நாடகத்தின் ஸ்ரீகாந்த் மத்யா (14.85), ஆந்திரத்தின் யஷ்வந்த்குமார் லவேடி (15.01) ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வென்றனர்.
- அதேபோல், மகளிருக்கான 100 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் தமிழகத்தின் சி.கனிமொழி 13.63 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார்.

## முதல் ஏடிபி டூர் பட்டம் வென்றார் அஸ்லான்



- துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷியாவின் அஸ்லான் கராட்சேவ் சாம்பியன் ஆனார். இது அவரது முதல் ஏடிபி டூர் பட்டமாகும்.
- இறுதிச்சுற்றில் அவர் தென் ஆப்பிரிக்காவின் லாய்ட் ஹாரிஸை 6-3, 6-2 என்ற செட்களில் வீழ்த்தினார்.

## தேசிய டென்னிஸ்: அர்ஜுன், ராஷ்மிகா சாம்பியன்

- புராஜெக்ட் டென்னிஸ் ஹார்டு கோர்ட் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் அர்ஜுன் காதே, ராஷ்மிகா பாமிடிபடி ஆகியோர் தங்களது பிரிவில் சாம்பியன்கள் ஆகியனர்.
- இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் மகாராஷ்டிரத்தின் அர்ஜுன் காதே 6 - 3, 6 - 4 என்ற செட்களில் தமிழகத்தின் பிருத்வி சேகரை வீழ்த்தி வாகை சூடினார்.
- முன்னதாக அர்ஜுன் தனது அரையிறுதியில் 2019 - ஆம் ஆண்டு சாம்பியன் நிக்கி பூனசாவை தோற்கடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அதேபோல் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் தெலங்கானாவின் ராஷ்மிகா பாமிடிபடி 6 - 2, 7 - 6 (7/2) என்ற செட்களில் குஜராத்தின் வைதேகி சௌதரியை தோற்கடித்து சாம்பியன் ஆனார்.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: கலப்பு அணிகளில் இந்தியாவுக்கு 2 தங்கம்

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மற்றும் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவுகளில் இந்தியாவின் கலப்பு அணிகள் தங்கப் பதக்கம் வென்றன. அதேபோல் ஆடவர் ஸ்கீட் அணிகள் பிரிவிலும் இந்தியர்கள் முதலிடம் பிடித்தனர்.
- இப்போட்டியில், இந்தியா 6 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் என 14 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- 10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் இளவேனில் வளரிவன், திவ்யான்ஷ் சிங் பன்வார் இணை 16 ஷாட்களுடன் தங்கம் வென்றது. சீனியர் உலகக் கோப்பை போட்டியில் இளவேனிலுக்கு இது முதல் தங்கம்; திவ்யான்ஷுக்கு இது 4 - ஆவது தங்கமாகும்.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: அங்கத் - கனிமத் ஜோடிக்கு தங்கம்



- தில்லியில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அங்கத் வீர்சிங் பாஜ்வா, கனிமத் சிகோன் இணை தங்கப் பதக்கம் வென்றது.
- பதக்கத்துக்கான சுற்றில் அங்கத் - கனிமத் இணை 33 ஷாட்களுடன் முதலிடம் பிடித்தது. கஜகஸ்தானின் ஓல்கா பனாரினா - அலெக்ஸாண்டர் யெஷ்சென்கோ ஜோடி 29 ஷாட்களுடன் வெள்ளியை கைப்பற்றியது. இதே பிரிவில் பங்கேற்றிருந்த மற்றொரு இந்திய ஜோடியான பரினாஸ் தலிவால் - மைராஜ் அகமது கான் வெண்கலப் பதக்கம் வெல்லும் வாய்ப்பை தவறவிட்டனர்.

**உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: தங்கம் வென்றனர் சிங்கி யாதவ், ஐஷ்வரி பிரதாப் தோமர்**

- மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் முதல் 3 இடங்களையும் இந்திய வீராங்கனைகளே பிடித்தனர். இளம் வீராங்கனை சிங்கி யாதவ் 32 புள்ளிகளுடன் தங்கம் வெல்ல, அனுபவமிக்க வீராங்கனை ராஹி சர்னோபாத் 30 புள்ளிகளுடன் வெள்ளியை கைப்பற்றினார். மானு பாக்கர் 28 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தை தனதாக்கினார்.

**உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: விஜய்வீர் - தேஜஸ்வினி ஜோடிக்கு தங்கம்**

- உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் 25 மீ. ரேபிட் ஃபயர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் விஜய்வீர் சித்து - தேஜஸ்வினி ஜோடி தங்கம் வென்றது.
- 25 மீ. ரேபிட் ஃபயர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் விஜய்வீர் சித்து - தேஜஸ்வினி ஜோடி 9 - 1 என்ற புள்ளிகள் கணக்கில் சகநாட்டவரான குருபிரீத் சிங் - அசோக் பாட்டீல் ஜோடியை வீழ்த்தியது.

ARUL IAS ACADEMY

# 11. முக்கிய தினங்கள்

**சிறப்பு நாட்கள் மற்றும் அதன் முக்கியத்துவம்**

- தேசிய தடுப்பூசி தினம் - மார்ச் 16
- உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15
- உலக கணித தினம் - மார்ச் 14
- சர்வதேச ஆறுகளின் மீதான நடவடிக்கை தினம் 2021 - மார்ச் 14

## CISF எழுச்சி தினம் – மார்ச் 10



- இந்த ஆண்டு மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையின் (Central Industrial Security Force - CISF) 50வது எழுச்சி தினமானது கொண்டாடப்பட்டது.
- CISF ஆனது 1969 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இது இந்தியாவில் மத்திய ஆயுதக் காவல் படையின் (Central Armed Police Force - CAPF) ஒரு பிரிவாகும்.
- இது மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் அல்லாமல் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.
- இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது.
- CISFன் பொது இயக்குநர் இந்தியக் காவல் பணி அதிகாரியான ராஜேஷ் ரஞ்சன் ஆவார்.
- இது நாட்டில் இருக்கும் விண்வெளி, அணு ஆயுதம், அரசு மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் அமைப்புகளைப் பாதுகாக்கின்றது.
- இது பேரழிவு மேலாண்மையிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

## உலக சிறுநீரக தினம் – மார்ச் 11

- உலக சிறுநீரக தினம் என்பது நமது சிறுநீரகங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படும் ஒரு உலகளாவியப் பிரச்சாரம் ஆகும்.




- உலக சிறுநீரக தினமானது சர்வதேச சிறுநீரகவியல் சமூகம் மற்றும் சர்வதேச சிறுநீரகக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஒரு கூட்டு முன்னெடுப்பாகும்.
- உலக சிறுநீரக தினமானது 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.
